Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, JANUARY 26, 2023

வியாழக்கிழமை ஜனவரி 26, 2023 | ஒளி: 08 கதிர்: 195 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE



## புணானை விபத்தில் குழந்தை உட்பட இருவர் மரணம்

### ஜனாஸாக்கள் இரண்டும் ஒப்படைப்பு

■ எச்.எம்.எம்.பர்ஸான்

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புணானை பிரதான வீதியில் செவ்வாய்க்கிழமை (24) மாலை இடம்பெற்ற கோர விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

புத்தளம், சிலாபம் பகுதியில் இருந்து காத்தான்குடி நோக்கி சென்ற வேனும் கல்முனை பகுதியில் இருந்து பொலன்னறுவை நோக்கி பயணித்த பஸ் வண்டியும் நேருக்குநேர் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2




பரீட்சைக் காலத்தில் மின்வெட்டு

## ஆணைக்குழுவில் 3 அதிகாரிகள் ஆஜர்

கடந்த 23ஆம் திகதி ஆரம்பமாகி பெப்ரவரி 17ஆம் திகதி வரை இடம்பெறவுள்ள க.பொ.த உயர்தரப் பரீட்சை காலத்தில் மின்வெட்டு அமல்படுத்தப்பட்டு வருகின்றமை குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விடுத்த அழைப்பாணைக்கு அமைய அதிகாரிகள் மூவர், புதன்கிழமை (25) காலை ஆணைக்குழுவில் ஆஜராகினர்.

தொடர்ச்சி P2



## பணம் வைப்பிலிடும் இயந்திரத்தை அலக்காகத் தூக்கிச்சென்ற கும்பல்

### சாரதியுடன் வேனை கடத்தி துணிகரம்: கம்பளைக்கு விரைந்தது 'ரோமா'

■ நவி

பணம் வைப்பிலிடும் தன்னியக்க இயந்திரத்தை கழற்றி, அலக்காகத் தூக்கிச்சென்ற துணிகர சம்பவமொன்று கம்பளையில் இடம்பெற்றுள்ளது. அங்குள்ள தனியார் வங்கியொன்றில் பொருத்தப்பட்டிருந்த இயந்திரமே இவ்வாறு தூக்கிச் செல்லப்பட்டுள்ளது.

கொள்ளையிடுவதற்காக வேன் ஒன்றைக் கடத்திய நால்வர் அடங்கிய கும்பல், சாரதியைக் கட்டி, அந்த வாகனத்துக்குள்ளே போட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

தொடர்ச்சி P2



அரசியலமைப்பு பேரவைக்கு

## சிறு கட்சிகளின் பிரதிநிதிகளை நியமிப்பதில் முடிவில்லை

அரசியலமைப்பு பேரவைக்கு எதிர்க்கட்சியில் உள்ள சிறிய கட்சிகளின் பிரதிநிதிகளையும் நியமிப்பது தொடர்பில் நேற்று (25) கூடிய அரசியலமைப்பு பேரவையில் கலந்துரையாடப்பட்டாலும் அது தொடர்பில் இறுதித் தீர்மானம் எட்டப்படவில்லை என பாராளுமன்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2



## கொள்கை வட்டி வீதங்களை அதே மட்டத்தில் பேண தீர்மானம்

இலங்கை மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தையும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தையும் முறையே 14.50 சதவீதம், 15.50 சதவீதம் கொண்ட அவற்றின் தற்போதைய மட்டங்களில் பேணுவதற்கு மத்திய வங்கியின் நாணயச் சபை தீர்மானித்துள்ளது.

தொடர்ச்சி P2

மின்சாரசபையின் செயற்பாட்டுச் செலவுகளை

# தாங்கிக்கொள்ள முடியவில்லை

மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு உடனடியாக அனுமதி வழங்க முடியுமா, கடந்த காலத்துக்கும் ஏற்புடைய வகையில் மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க முடியுமா என்பது தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற ஆவணங்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளன என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தேசிய பேரவையில் புதன்கிழமை (25) தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



© Parliament of Sri Lanka

## டொக்டர் ஷாபியின் மனு மே 16இல் பரிசீலனை



குருநாகல் போதனா வைத்தியசாலையின் வைத்தியர் மொஹமட் ஷாபி ஷிஹாப்தீன் தாக்கல் செய்த அடிப்படை உரிமைகள் மீறல் மனுவை, மே மாதம் 16ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வதற்கு உயர்நீதிமன்றம், புதன்கிழமை (25) தீர்மானித்தது.

தொடர்ச்சி P2

## கப்ராலுக்கு எதிரான வழக்கு வாபஸ்

### விடுவிக்குமாறு நீதவான் உத்தரவு

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலுக்கு எதிரான வழக்கு வாபஸ் பெற்றுக்கொள்ளப்பட்டதை அடுத்து, அவரை வழக்கில் இருந்து விடுவிக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே, புதன்கிழமை (25) உத்தரவிட்டார்.

முன்னாள் ஆளுநருக்கு எதிராக குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 136(1)(அ) பிரிவின் பிரகாரம் நுகேகொட நலங்காராமதிபதி தினியாவல பாலித தேரர் தனிப்பட்ட முறைப்பாட்டை பதிவு செய்திருந்தார்.

தொடர்ச்சி P2




## தலதா மாளிகையில் ஆயர் ரொபர்ட்

இலங்கைக்கு சுற்றுலாப் பயணத்தை மேற்கொண்டுள்ள ஐரோப்பிய மறைமாவட்ட பிரதம போதகர் ஆயர் ரொபர்ட் இனெஸ், கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு புதன்கிழமை (25) விஜயம் செய்திருந்தார். (ஷேன் செனவிரத்ன)

மிகக்குறைந்த மதிப்புள்ள நாணயங்கள்

## பட்டியலில் முன்னேறியது இலங்கை ரூபாய்




உலகின் மிகக் குறைவான மதிப்புள்ள நாணயங்களின் பட்டியலில் 4ஆம் இடத்தில் இருந்த இலங்கை 8ஆம் இடத்துக்கு பின்தள்ளப்பட்டு இலங்கை ரூபாயின் பெறுமதி வலுவடைந்துள்ளது.

ஜோன்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் பயன்பாட்டுப் பொருளாதாரப் பேராசிரியரான ஸ்டீவ் ஹான்கியின் சுட்டெண்ணின் அடிப்படையிலேயே இந்தப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## முஜிபுரின் இடத்துக்கு பௌசி



தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்துள்ள கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மானின் வெற்றிடத்துக்கு ஏ.எச்.எம் பௌஸியின் பெயர் குறிப்பிடப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டு உள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவால் இந்த விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிட்டுள்ளது.

தொடர்ச்சி P2




ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின்

## 9 அதிகாரிகளுக்கு பதவியுடன் 3 கோடி ரூபாய் கொடுப்பனவு

### விசாரணை நடத்துமாறு ஜனாதிபதிக்கு கடிதம்

அரச நிறுவனங்களில் பதவி உயர்வு மற்றும் சம்பள அதிகரிப்பு என்பன நிறுத்தப்பட்டுள்ள நிலையில், கடந்த வருடத்தில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிர்வாக சபையினால் ஒன்பது அதிகாரிகளுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டு 3 கோடி

தொடர்ச்சி P2



## நிலக்கரி இறக்குமதிக்கு 2 வங்கிகளுடன் பேச்சு

### கடன் கிடைத்தால் மின்வெட்டும் குறையும்

நுரைச்சோலை லக் விஜய நிலக்கரி அனல்மின் நிலையத்துக்கு தேவையான நிலக்கரியை இறக்குமதி செய்வதற்கான நிதியை கடன் மூலம் பெறுவதற்கு இரண்டு அரச வங்கிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாக மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வங்கிகளில் இருந்து பெறப்படும் கடன் வசதிகளின் அளவுக்கேற்ப இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் இருந்து எரிபொருள் கொள்வனவு செய்யப்பட்டு குறைந்தளவிலான துண்டிப்பு நேரங்களுடன் மின்சாரம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ச்சி P2

## வரி வசூலிப்பை வாபஸ் பெறும் வரை போராடுவோம்



அரசாங்கத்தால் அமல்படுத்தப்பட்டுள்ள வரி வசூலிப்பு சட்டத்துக்கு எதிரான போராட்டமானது, அசாதாரணமான வரிவசூலிப்பு சட்டத்தை மீளப்பெறும் வரை தொடரும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய மற்றும் ஊடகக்குழு உறுப்பினர் டொக்டர் வாசன் இரட்ணசிங்கம் தெரிவித்தார்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் பல்வேறு தொழிற்சங்கங்களுடன் இணைந்து போராட்டங்களை முன்னெடுக்கும் நிலையில்,

தொடர்ச்சி P2

நூற்றாண்டு பயணத்தில் இந்தியாவும் இலங்கையும்

## இரு நாடுகளின் முன்னேற்றத்துக்கு ஒத்துழைப்போடு கைகோர்க்க வேண்டும்

### இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே



சுதந்திரத்தின் நூற்றாண்டு விழாவை இந்தியா 2047 இலும் இலங்கை 2048 இலும் கொண்டாடவுள்ள நிலையில் இலங்கை, இந்திய நாடுகள் ஒத்துழைப்புடன் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது மிக முக்கியம் என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தெரிவித்தார்.

இந்தியாவின் 74ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் கொழும்பு பண்டாரநாயக்க

தொடர்ச்சி P2

## 6 அத்தியாவசிய பொருட்களின் விலைகளை குறைத்தது சதொச

செத்தல் மிளகாய், அரிசி, பருப்பு உள்ளிட்ட 6 அத்தியாவசிய பொருட்களின் விலைகளை இன்று (26) முதல் அமலாகும் வகையில் குறைக்கவுள்ளதாக லங்கா சதொச நிறுவனம் அறிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து லங்கா சதொச விற்பனை நிலையங்களிலும் குறைக்கப்பட்ட விலைகளில் 6 பொருட்களையும் கொள்வனவு செய்ய முடியுமென சதொச அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## ஆணைக்குழுவில்...

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க, இலங்கை மின்சார சபையின் உதவிப் பொது முகாமையாளர் (பரிமாற்றம்- கம்பியற்ற செயற்பாடுகள்) ரொனால்ட் கொமஸ்டர், வலுச்சக்தி அமைச்சின் மேலதிக செயலாளர் சுகத் தர்மகீர்த்தி ஆகியோர் ஆணைக்குழுவுக்கு வருகை தந்தனர்.

2022 க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் கல்வி உரிமைகள் மின்வெட்டு காரணமாக மீறப்படுவதாக மனித உரிமைகள் ஆணைக்குழு அறிக்கை ஒன்றில் சுட்டிக்காட்டியிருந்தது.

மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சின் செயலாளர் மற்றும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஆகியோருக்கு உயர்தரப் பரீட்சை காலமான ஜனவரி 23 ஆம் திகதி முதல் பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி வரை மின்வெட்டை அமல்படுத்துவதைத் தவிர்க்குமாறு எழுத்து மூலம் திங்கட்கிழமை (23) அறிவித்ததாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், இவ்விவகாரத்தில் இரு அதிகாரிகளும் நடவடிக்கை எடுக்கத் தவறியதால், ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்திருந்தது.

## பணம் வைப்பிலிடும்...

சாரதி, வேனுடன் கண்டி, கலஹா பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் துணிகரமான கொள்ளைச் சம்பவம், புதன்கிழமை (25) அதிகாலை வேளையிலேயே இடம்பெற்றுள்ளது. இதனால், கம்பளை நகரில் ஒருவகையான பதற்றமான நிலைமை காலைவேளையில் ஏற்பட்டிருந்தது.

கறுப்புத் துணியால் முகத்தை மறைத்து கொண்டு கே.டீ.எச் ரக வேன் ஒன்றில் வந்த நால்வர் அடங்கிய கும்பலே இவ்வாறு கொள்ளையிட்டு தப்பிச்சென்றுள்ளது என ஆரம்பக்கட்ட விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது. வங்கிக்குள் திமுதிமுவென புகுந்த அந்தக் கும்பலில் ஒருவர், அங்கு இரவுநேர பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த பாதுகாப்பு உத்தியோகஸ்தரை, அவர் அமர்ந்திருந்த கதிரையிலேயே வைத்து கைகளை கட்டிவிட்டு, சத்தமிட்டால் கொன்றுவிடுவோம் என தலையில் துப்பாக்கியை வைத்து அச்சுறுத்தியுள்ளார்.

அதன் பின்னர், பணம் வைப்பிலிடும் தன்னியக்க இயந்திரத்தை கழற்றி, அலக்காகத் தூக்கி, வாகனத்தில் ஏற்றிக்கொண்டு அந்தக் கும்பல் தப்பிச் சென்றுள்ளது. தன்னை சுதாகரித்துக்கொண்ட பாதுகாப்பு உத்தியோகஸ்தர், கட்டப்பட்டிருந்த கைகளை விடுவித்து, வாகனத்தின் இலக்கத்தகடு இலக்கத்தை, புத்தகத்தில் எழுதியுள்ளார்.

சம்பவத்தை கேள்வியுற்று, ஸ்தலத்துக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், கண்டி, கலஹா சந்தியில் அநாதரவாக விடப்பட்டிருந்த SG PE 7611 என்ற இலக்கத்தை கொண்ட வேனை கைப்பற்றினர். வேனுக்குள் கட்டிப்போடப்பட்டிருந்த நிலையில் வேனின் சாரதியை மீட்டனர். பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், கொள்ளையடிக்கப் பயன்படுத்திய வாகனம், மாவனெல்ல, அரனாயக்க பிரதேசத்தில் உள்ள, வாகனங்களை வாடக்கைக்கு விடும் நிறுவனத்துக்குச் சொந்தமானது என கண்டறியப்பட்டது.

இந்த வாகனம், வாடகைக்கு அமர்த்தியவர்களை ஏற்றிச் செல்வதற்காக, கலஹா சந்திக்கு, 24ஆம் திகதியன்று இரவு வந்துள்ளது. கலஹா சந்தியில் வைத்து இருவர் ஏறியுள்ளனர். தெல்தோட்டையில் இன்னுமிருவரை ஏற்றவேண்டுமென முதலில் ஏறிய இவ்விருவரும் கூறியமைக்கு அமைய, சாரதி வாகனத்தை தெல்தோட்டைக்குச் செலுத்தியுள்ளார். அங்கு மேலுமிருவர் வாகனத்தில் ஏறிக்கொண்டுள்ளனர். நால்வரும் ஏறியதன் பின்னர், கலஹா- தெல்தோட்டை பகுதிக்கு செல்ல வேண்டும் என்று சாரதிக்கு தெரிவித்துள்ளனர். அவர்கள் கூறிய வீதியில் சாரதியும் வாகனத்தை செலுத்தியுள்ளார்.

ஆள் அரவமற்ற இடமொன்றில் வாகனத்தை நிறுத்தி, துப்பாக்கியை சாரதியின் தலையில் வைத்து மிரட்டிய கும்பல், சாரதியின் கண்களைக் கட்டி, இடைநடுவில் இறக்கிவிட்டுள்ளனர். சாரதியை கண்காணிப்பதற்காக அவ்விடத்தில் ஒருவர் நின்றிருந்துள்ளார் என்பதும் விசாரணைகளின் ஊடாக தெரியவந்துள்ளது.

அதன் பின்னரே, கம்பளைக்கு வாகனத்தில் வந்த நால்வரும், வங்கியின் தன்னியக்க இயந்திரத்தை கொள்ளையிட்டுக்கொண்டு மீண்டும் தெல்தோட்டைக்குத் திரும்பியுள்ளனர்.

## புணாணை விபத்தில்...

காத்தான்குடி வைத்தியசாலையில் வைத்தியராக கடமை புரியும் 30 வயதுடைய வைத்திய பாத்திமா முப்லிஹா என்பவர் தனது குடும்பத்துடன் பயணித்த வேன் ஒன்றே இவ்வாறு விப்துக்குள் சிக்கியுள்ளது.

மகப்பேற்று விடுமுறையில் நின்ற வைத்தியர் கடமையை பொறுப்பேற்க தனது சொந்த ஊரான புத்தளம் - சிலாபத்தில் இருந்து காத்தான்குடி வைத்தியசாலைக்கு சென்று கொண்டிருந்த போதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில், வைத்தியரின் நான்கு மாத ஆண் குழந்தை மஹ்தி கான் மற்றும் வைத்தியரின் மாமாவான 74 வயதுடைய ஏ.எம்.எம்.மவூசூப் ஆகியோர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், இவ்விபத்தில் படுகாயமடைந்த வைத்தியர், அவரது தந்தை உட்பட ஐந்து பேர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அதில் நான்கு பேர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டுள்ளனர்.

வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த வைத்தியரின் ஒன்றரை வயது மகள், சிகிச்சையின் பின்னர் உறவினர்ககளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்ற நிலையில், ஜனாஸாக்கள் இரண்டும் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## சிறு கட்சிகளின்...

புதிய அரசியலமைப்பு பேரவையின் முதலாவது கூட்டம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (25) பகல் பாராளுமன்ற கட்டட வளாகத்தில் நடைபெற்றது.

சுயாதீன ஆணைக்குழு சபையை அமைப்பது தொடர்பில் நேற்றைய கூட்டத்தில் கலந்துரையாடப்படவில்லை என தெரிவித்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, சபையை நிர்வகிப்பதற்கான சபை நியமனம், அடுத்த கூட்டம் நடத்தப்படும் விதம் உள்ளிட்ட விடயங்கள் குறித்தே கலந்துரையாடப்பட்டது என்றார்.

## கொள்கை...

மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் புதன்கிழமை (25) வெளியிட்ட அறிக்கையில் மேற்குறிப்பிட்ட விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையானது ஜனவரி 24ஆம் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு மற்றும் உலகளாவிய பேரண்டப்பொருளாதார பக்கங்களின் மீதான அண்மைய மற்றும் எதிர்பார்க்கப்படுகின்ற அபிவிருத்திகள் மற்றும் எறிவுகள் என்பவற்றைக் கருத்திற்கொண்டு நாணயச்சபை இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

பணவீக்க அழுத்தங்களைக் கட்டுப்படுத்தும் பொருட்டு நாணய நிலைமைகள் தொடர்ந்தும் போதியளவில் இறுக்கமாகக் காணப்படுவதனை நிச்சயப்படுத்துவதற்கு தற்போதுள்ள இறுக்கமான நாணயக்கொள்கை நிலையினைப் பேணுவதானது அவசியமானதென சபை அபிப்பிராயப்பட்டது.

இறுக்கமான இறை கொள்கையுடன் இணைந்து இத்தகைய இறுக்கமான நாணய நிலைமைகள் பணவீக்க எதிர்பார்க்கைகளை கீழ்நோக்கி சீராக்கம் செய்து, பணவீக்க வீதங்களை 2023 இறுதியளவில் விரும்பத்தக்க மட்டங்களுக்கு மத்திய வங்கி கொண்டுவருவதனை இயலச்செய்வதுடன் அதன்மூலம் பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டினை நடுத்தர காலத்தில் மீட்டெடுக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் ஆகிய இரண்டினதும் அடிப்படையிலமைந்த ஆண்டுக்கு ஆண்டு முதன்மை மற்றும் மையப் பணவீக்கமானது எதிர்பார்க்கப்பட்டவாறு தொடர்ச்சியாக மூன்றாவது மாதமாக 2022 டிசெம்பரில் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தது. உள்நாட்டு நிரம்பல் நிலைமைகளில் எதிர்பார்க்கப்படும் மேம்பாடுகள் மற்றும் குறையும் உலகளாவிய பண்ட விலைகளை உள்நாட்டு விலைகளுக்கு ஊடுகடத்தல் என்பனவற்றால் ஆதரவளிக்கப்பட்டு 2023 ஆண்டு முழுவதும் பணவீக்க வீதங்களில் கீழ்நோக்கிய சீராக்கங்கள் தொடருமென எதிர்பார்ப்பதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தாங்கிக்கொள்ள முடியவில்லை

மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு விரைவில் அனுமதி வழங்குவதற்கும், கடந்த காலத்துக்கும் ஏற்புடைய வகையில் மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு அனுமதி வழங்குவதற்கும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உள்ளதா என்பது குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறுவதற்கு ஆணைக்குழு ஏகமனதாகத் தீர்மானம் எடுத்திருப்பதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் தேசிய பேரவையில் தெரிவித்தனர்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில், பிரதமர் தினேஷ் குணவர்த்தனவின் பங்கேற்புடன் செவ்வாய்க்கிழமை (24) பாராளுமன்றத்தில் நடைபெற்ற தேசிய பேரவை கூட்டத்திலேயே மின்சாரக் கட்டணத்தை உயர்த்தும் யோசனை குறித்துக் கலந்துரையாடப்பட்டது.

2014ஆம் ஆண்டும் இதேபோன்று மின்சாரக் கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர இங்கு கருத்துத் தெரிவித்தார். தேவைப்பட்டால் இது தொடர்பான ஆவணங்களை ஆணைக்குழுவுக்கு வழங்க முடியும் என்றும் குறிப்பிட்டார். அத்துடன், இவ்விடயம் தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையை விரைவில் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுத்தார்.

இலங்கை மின்சாரசபையின் செயற்பாட்டுச் செலவுகள் தாங்கிக்கொள்ள முடியாத நிலையில் இருப்பதாக மின்சார சபையின் அதிகாரிகள் இங்கு சுட்டிக்காட்டினர்.

## கப்ராலுக்கு...

இலங்கை அரசுக்குச் சொந்தமான 6.5 மில்லியன் அமெரிக்க டொலரை முறைகேடாகப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பான வழக்கு நேற்றையதினம் எடுத்துக் கொள்ளப்பட்ட போது, வழக்கை வாபஸ் பெற்றுக்கொள்வதாக முறைப்பாட்டாளர் தரப்பு அறிவித்ததை அடுத்து நீதவான் மேற்குறிப்பிட்ட உத்தரவை பிறப்பித்தார்.

2014ஆம் ஆண்டு அஜித் நிவார்ட் கப்ரால் மத்திய வங்கியின் ஆளுநராக கடமையாற்றிய போது, அமெரிக்காவின் சிஜஏ நிறுவனத்தின் ஆதரவாளரான இமாத் ஷா சுபேரி என்ற அமெரிக்க வர்த்தகருக்கு மத்திய வங்கியின் ஊடாக 6.5 மில்லியன் அமெரிக்க டொலரை செலுத்தியதாக முறைப்பாட்டாளர் குற்றம் சுமத்தியுள்ளார்.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால், அரசியலமைப்பின் 150ஆவது சரத்தை மீறி, பாராளுமன்றம் மற்றும் அமைச்சரவையின் முன் அனுமதியின்றி 6.5 மில்லியன் அமெரிக்க டொலரை செலுத்தியுள்ளதாக முறைப்பாட்டாளர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பட்டியலில்...

ஜனவரி முதலாம் திகதி முதல் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 45.62 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் அதற்கு இணங்க இலங்கை பட்டியலின் 8ஆம் இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஜனவரி முதலாம் திகதி முதல் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 47.69 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

முன்னைய சுட்டெண்ணுடன் ஒப்பிடுகையில், புதிய சுட்டெண்ணில் இலங்கை ரூபாய் 2.07 சதவீதத்தால் வலுவடைந்துள்ளது.

அதற்கமைய ய உலகில் மிகவும் குறைவான மதிப்புடைய நாணயங்களின் சுட்டெண்ணில், இலங்கை நான்கு இடங்கள் வீழ்ச்சியடைந்து எட்டாவது இடத்துக்கு வந்துள்ளது.

## டொக்டர் ஷாபியின்...

தான் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டமை சட்டவிரோதமானது என்று கோரி டொக்டர் ஷாபி தாக்கல் செய்த மனு, பிரியந்த ஜயவர்தன, எஸ்.துரைராஜா, குமுதுனி விக்கிரமசிங்க ஆகிய மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது, மே மாதம் 16ஆம் திகதி மனுவை பரிசீலிக்க தீர்மானிக்கப்பட்டது.

குருநாகல் பொலிஸ் நிலைய குற்றப் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் புஷ்பலால், குருநாகல் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர், பொலிஸ் மா அதிபர் சந்தன விக்கிரமரத்ன, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர். சட்டவிரோத கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் பணமோசடி குற்றச்சாட்டின் பேரில் டொக்டர் ஷாபி கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

## முஜிபுரின் இடத்துக்கு...

2020ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட பௌசி, 48,701 விருப்பு வாக்குகளை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கொழும்பு மாநகர சபையின் மேயர் பதவிக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளராக போட்டியிடவுள்ள முஜிபுர் ரஹ்மான், தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## நிலக்கரி...

ஜனவரி மாதத்துக்கு திட்டமிடப்பட்ட 7 நிலக்கரி கப்பல்களில் 5 கப்பல்கள் தரையிறக்கப்பட்டுள்ளதாகவும், ஏனைய இரண்டு கப்பல்கள் இந்த மாதத்துக்குள் வருகைதரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, நுரைச்சோலை மின்நிலையத்துக்கு தேவையான 33 நிலக்கரி சரக்குகளில் 10 இறக்கப்பட்டுள்ளதாகவும் ஜனவரியில் மேலும் 2 கப்பல்களை எதிர்பார்க்கிறோம் என்றும் அமைச்சர் காஞ்சன விஜேகேசர தெரிவித்திருந்தார்.

பெப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களில் மாதாந்தம் தலா 7 கப்பல்கள் வருகைதரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கிணங்க, 21 கப்பல்கள் வருகைதரவுள்ளன.

இலங்கை மின்சாரசபையிடம் போதிய பணப் புழக்கம் இன்மை மற்றும் நிதியளிப்பதில் தாமதம் ஆகியவை சரியான நேரத்தில் சரக்குகளை பாதுகாப்பது மற்றும் செயல்முறை தாமதப்படுத்துவது சவாலாக உள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டிருந்தார்.

## வரி வசூலிப்பை வாபஸ்...

கொழும்பில் நேற்று (25) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், சம்பளம் பெறுகின்ற நாளான இன்று (நேற்று) 25 ஆம் திகதி எம் அனைவரும் கவலை தரும் நாளாக அமைந்திருந்தது. கிடைக்கப்பெற்ற சம்பளத்தில் வரியாக பாரிய தொகை வசூலிக்கப்பட்டுள்ளது. ஆகவே இந்த விடயத்தை அடிப்படையாகக் கொண்டு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம், ஏனைய தொழில் வல்லுநர் தொழிற்சங்கங்களுடன் சேர்ந்து கறுப்பு வாரத்தை அனுஷ்டித்து வருகின்றது.

எனவே, அமல்படுத்தப்பட்டுள்ள வரி வசூலிப்பு சட்டத்துக்கு எதிராக நாம் தொடர்ச்சியாக பாரிய போராட்டத்துக்கு தயாராகியுள்ளதாகத் தெரிவித்த அவர், திணிக்கப்பட்ட அசாதாரணமான இந்த வரி வசூலிப்பு சட்டத்தை அரசாங்கம் வாபஸ் பெற்று, சாதாரண வரி வசூலிப்பு சட்டத்தை கொண்டு வர வேண்டும் என வலியுறுத்தினார்.

அரசாங்கமும் அரசாங்கம் சார்ந்தவர்களும் பொய் பிரசாரங்களை மேற்கொள்கின்றனர். நாம் சாதாரண வரிவசூலிப்பை எதிர்க்கவில்லை. அரசாங்கமானது தன்னிச்சையாக செயற்படுத்தி தொழில் வல்லுநர்களை நாட்டிலிருந்து வெளியேற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது என்றார்.

## இரு நாடுகளின் முன்னேற்றத்துக்கு...

ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை (24) நடைபெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றுகையிலே இந்திய உயர் ஸ்தானிகர் இதனை தெரிவித்தார்.

'நல்லிணக்கத்தின் ரிதம்' என்ற பெயரில் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததோடு இந்தியாவின் நாகலாந்து பிரதேசத்தில் உருவான உலகப் புகழ்பெற்ற UDX இசைக்குழுவும் இலங்கை Heavy metal Quintet Band Stigmata இசைக்குழுவும் இணைந்து இந்த இசை நிகழ்சியை நடத்தின.

இரு நாடுகளுக்கும் இடையிலான நெருங்கிய நட்புறவு, சமாதானம், சுபீட்சம் என்பன தொடர்பிலான இருநாட்டு எதிர்பார்ப்புகளையும் வெளிப்படுத்தும் வகையில் இரு இசைக்குழுக்களும் தெரிவு செய்யப்பட்டதாக இந்திய உயர்ஸ்தானிகர் தனது உரையில் தெரிவித்தார்.

இந்தியா வளர்ந்து வரும் பொருளாதாரத்தையும் பல்வகைமையுடைய ஜனநாயகத்தையும் கொண்டுள்ள நாடாகும். இந்த நிலைமை இலங்கைக்கும் பொதுவானதாகும். மேலும் இலங்கை இன்னும் சில நாள்களில் தனது 75 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே மிகவும் நெருங்கிய நண்பர்கள் என்ற அடிப்படையில் நாம் இந்நிகழ்வை ஒற்றுமையின் உண்மையான ரிதமாக கொண்டாட வேண்டும். இது வெவ்வேறு இசைக் குழுக்களின் இசைச் சங்கமம் மட்டுமல்ல; இது இலங்கை மற்றும் இந்தியாவின் ஒற்றுமையையும் குறிக்கும்.

75 ஆவது சுதந்திர தினத்துடன் நாமும் எமது ஒற்றுமை மற்றும் 75 வருட இராஜதந்திர உறவைக் கொண்டாடுவதுடன் எமது நூற்றாண்டு சுதந்திர விழாவை நோக்கிய எமது பயணத்துக்காக எம்மை மீண்டும் அர்ப்பணிப்போம் என்றும் தெரிவித்தார்.

அரசியல் தலைவர்கள், தொழில் வல்லுநர்கள், விஞ்ஞானிகள், இராஜதந்திரிகள், அதிகாரிகள் மற்றும் அரசு ஊழியர்கள் மட்டுமன்றி சமூகத்தின் ஒவ்வொரு பிரிவினரும் இப்பயணத்தில் பங்கு வகிக்க வேண்டுமெனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

## 9 அதிகாரிகளுக்கு...

ரூபாய்க்கும் மேல் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதாக விமான நிறுவன தொழிற்சங்கம் ஜனாதிபதிக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளது.

அரசாங்கத்தையும் துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சையும் ஸ்ரீ லங்கா எயார்லைன்ஸ் நிர்வாக சபை தவறாக வழிநடத்தியுள்ளதாக அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பதவி உயர்வு வழங்கப்பட்ட போதும் 9 அதிகாரிகளுக்கும் சம்பளம் அதிகரிக்கப்படவில்லை என்று ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் அதிகாரிகள் அமைச்சுக்கு அறிவித்துள்ள போதிலும், அவர்களுக்கு மாதாந்தம் ஏறக்குறைய 30 இலட்சம் ரூபாய் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளதாக தொழிற்சங்கம் குறிப்பிட்டுள்ளது. குறித்த 9 அதிகாரிகளின் அடிப்படை சம்பளத்தை அதிகரிக்காமல் பதவி உயர்வுகள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை அதிகரித்துள்ள ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் நிர்வாக சபை, அரசாங்கத்தின் சட்டவிதிகளை மீறியுள்ளதாகவும் தொழிற்சங்கங்கள் தெரிவிக்கின்றன.

பதவி உயர்வுகள் மற்றும் கொடுப்பனவு அதிகரிப்புகள் குறித்து விசாரணை நடத்தி நிர்வாக சபை செய்த தவறை சரி செய்யுமாறு துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவிடம் தொழிற்சங்கம் முன்னர் கோரிக்கை விடுத்திருந்தபோதும் விசாரணை நடத்தப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது

எனவே, துரித கதியில் விசாரணை நடத்தி நிர்வாக சபையின் நடவடிக்கை சரிசெய்யப்பட வேண்டும் என்று தொழிற்சங்கத்தால் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## 6 அத்தியாவசிய...

ஒரு கிலோ கிராம் செத்தல் மிளகாயின் விலை 30 ரூபாயால் குறைக்கப்பட்டு புதிய விலையாக 1,700 ரூபாய் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், ஒரு கிலோ கிராம் வெள்ளை பச்சை அரிசி 10 ரூபாய் குறைக்கப்பட்டு 169 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படவுள்ளது. ஒரு கிலோ கிராம் சிவப்பு அரிசி 8 ரூபாய் குறைக்கப்பட்டு 179 ரூபாய்க்கும் ஒரு கிலோ கிராம் வெள்ளை நாடு (உள்நாடு) 5 ரூபாய் குறைக்கப்பட்டு 184 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படவுள்ளதாக சதொச அறிவித்துள்ளது.

மேலும், ஒரு கிலோ கிராம் சிவப்பு பருப்பு மற்றும் கீரி சம்பா ஆகியவை தலா 5 ரூபாயால் குறைப்பட்டு முறையே 365 மற்றும் 235 ரூபாய்களுக்கு விற்பனை செய்யப்படவுள்ளன.

# வீரசேகரவுக்கு மூளை குழப்பம்



எந்தவொரு காரணங்களுக்காகவும் நாட்டில் இப்போது தேர்தலை நடத்த முடியாதெனவும், தேர்தலை நடத்தினால் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுமென கூறும் முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகரவுக்கு மூளை குழம்பிப்போயுள்ளதா என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானவே கேள்வி எழுப்பினார்.

தேர்தலைப் பிற்போடுவதற்கு அரசாங்கம் ஒவ்வொரு காரணங்களை தேடிக்கொண்டிருக்கிறது. ஆனால், தேடும் எந்தவொரு காரணமும் வெற்றியளிக்கவில்லை. வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிட்டார்கள். அது பயனளிக்கவில்லை. இப்போது பணமில்லை என்கிறார்கள் எனினும், தேர்தலுக்கான நிதியை வழங்காதிருக்க முடியாது என்றார்.

தேர்தலை நடத்தாமலிருப்பதற்கான பலியை அரச ஊழியர்களின் தோலில் சுமத்தப் பார்க்கிறார்கள். செயற்கை நுண்ணறிவு தொடர்பில் பேசிய கோட்டாபய ராஜபக்ஷ, தற்போது உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் பந்தத்தைப் பற்ற வைத்துகொண்டு கற்கும் நிலைமையை ஏற்படுத்திவிட்டார் எனவும் தெரிவித்தார்.

தேர்தலை நடத்துவதற்கு, மாணவர்கள் கல்வி கற்க மின்சாரத்தை வழங்கக்கூட பணமில்லை என்றால் எதற்காக 38 இராஜாங்க அமைச்சர்களை அரசாங்கம் நியமிக்க வேண்டும், அரசாங்கத்துடன் இவர்களை தொடர்ந்து வைத்திருப்பதற்காகவே இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றார்.

# தேர்தலுக்கு முகங்கொடுக்க தயார்



தேர்தலுக்கு முகங்கொடுப்பதற்கு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தயாராக இருக்கிறது. தேர்தலை பிற்போட வேண்டும் என்கிற நிலைப்பாடு எமக்கு இருந்தால், தேர்தலுக்கான செலவுகளைக் கூறிக்கொண்டிருக்காது பல்வேறு வழிகளில் அதனை செய்ய முடியும் என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சஞ்ஜீவ எதிரிமான்ன தெரிவித்தார்.

நாட்டில் பல தேர்தல்கள் வேட்புமனுக்கள் கோரப்பட்ட நிலையில் பிற்போடப்பட்டுள்ளன. கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் மாகாண சபைத் தேர்தல்கள் இரண்டரை வருடங்களுக்கு மேலாகக் காலந்தாழ்த்தப்பட்டன. அதுபோல பொதுத் தேர்தலும் 6 மாதங்களுக்குப் பின்னரே நடைபெற்றது. கொரோனா வைரஸ் காலத்தில் தேர்தலை நடத்தவே வேண்டாம் என்றே எதிர்க்கட்சி கூறியது எனவும் தெரிவித்தார்.

உலகில் பலமிக்க ஜனநாயக நாடுகளில் கூட தேர்தல் வரும்போது தனக்கு சந்தர்ப்பமான வகையிலேயே அரசாங்கம் தேர்தலை நடத்துகின்றது. இது சரி, தவறென விவாதிக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

வரி அதிகரிக்கப்பட்டதில் பிரச்சினைகள் இருக்கின்றன. வரி அதிகரிப்புக்காக நிவாரணங்களை அரசாங்கம் வழங்க வேண்டும் என்றார்.

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு கடன் வழங்குவதை உறுதி செய்யுமாக இருந்தால், இலங்கையின் பொருளாதாரம் சரியானப் பாதைக்கு செல்வதாக உலகக்கு சான்றிதழ் வழங்கப்படும். இதனூடாக உலக வங்கி உள்ளிட்ட பல்வேறு தரப்பினரிடமிருந்து இலங்கை உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

வங்குரோத்தடைந்த நாடு என அறிவிக்கப்பட்டிருந்தாலும் உலக அளவிலான முதலீட்டாளர்கள் இலங்கை மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அதனாலேயே இந்தியாவின் அதானி, அந்நாட்டு அமைச்சர் ஜெய்சங்கர் ஆகியோர் இலங்கைக்கு வந்து முதலீடுகள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துகின்றனர் என்றார்.

# எதிர்கால பாதிப்புக்கு தேர்தலா காரணம்?



நாட்டில் தேர்தல் நடைபெற்றதால் நாட்டின் எதிர்காலம் இல்லாமல்போகவில்லை. மாறாக தேர்தலில் போட்டியிட்டு ஆட்சிக்கு வந்தவர்கள் தங்களது கடமைகளை சரிவர செய்யவில்லை என்பதாலேயே நாட்டின் எதிர்காலம் இல்லாமற்போயுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நளின் ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

தேர்தலை நடத்துவதற்கு 10 பில்லியன் ரூபாய் செலவு ஏற்படும் என தெரிவித்துள்ள அரசாங்க தரப்பினர் தேர்தலை நடத்தினால் மருந்துப் பொருள்கள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்களை கொள்வனவு செய்ய முடியாத நிலை ஏற்படும் என்கிறார்கள்.

ஆனால், இந்த வருடத்துக்கான வரவு- செலவு திட்டத்தின் மொத்த செலவு ரூ. 7,800 பில்லியன். இவ்வாறான நிலையில் தேர்தலுக்கு வெறும் 10 பில்லியன் ரூபாயே செலவிடப்படும் என்றார்.

எனினும், தேர்தலை சாதாரணமாக 7 பில்லியன் ரூபாய் செலவில் நடத்தி முடிக்கலாம் என தேர்தல் ஆணைக்குழுவு தெரிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

**“ வரவு– செலவு திட்டத்தின் மொத்த செலவு ரூ. 7,800 பில்லியன். தேர்தலுக்கு வெறும் 10 பில்லியன் ரூபாயே செலவிடப்படும்**

நாட்டின் முதலீடுகள் என்பது வேறு, நாட்டுக்குச் சொந்தமான வளங்களை விற்பனை செய்வது என்பது வேறு. முதலீடு என்கிற பெயரில் நாட்டின் வளங்களை விற்பனைச் செய்யப்படுவதை பொதுமக்கள் வேடிக்கைப் பார்க்க வேண்டும் என்றே அரசாங்கம் விரும்புகின்றது என்றார்.

# மாணவர்களின் வாழ்க்கையில் விளையாண்டு விடக்கூடாது

பாடசாலை மாணவர்களின் வாழ்வில் உயர்தரப்பரீட்சையே மிக முக்கிய திருப்பு முனையாகும் என்பதுடன் அவர்களின் அடுத்தக்கட்டத்தை தீர்மானிக்கும் பலப்பரீட்சையும்கூட. ஆகவே, மாணவர்களின் வாழ்க்கையுடன் அரசாங்கம் விளையாடக்கூடாது. உயர்தரப்பரீட்சை முடியும் வரையாவது மின்வெட்டு அமலாவதை நிறுத்த வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் வடகொழும்பு பிரதான அமைப்பாளரும், மேல்மாகாணசபையின் முன்னாள் உறுப்பினருமான சி.வை.பி. ராம் வலியுறுத்தியுள்ளார்.



“நாட்டில் தற்போது க.பொ.த. உயர்தரப்பரீட்சை நடைபெற்றுவருகின்றது. இக்காலப்பகுதிக்குள் மின்வெட்டை அமல்படுத்தாமல், மின்விநியோகத்தை சீராக வழங்குமாறு பரீட்சைகள் திணைக்களம், இலங்கை மின்சார சபை, பொது பயன்பாட்டு ஆணைக்குழு உட்பட சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் முன்கூட்டியே கோரிக்கை விடுத்திருந்தது. அதேபோல பெற்றோர் மற்றும் மாணவர்களும் இதே கோரிக்கையை விடுத்திருந்தனர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர், புதன்கிழமை (25) விடுத்திருந்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இவ்வாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு ஆட்சியாளர்களிடமிருந்து உரிய பதில் இல்லை. நேற்றைய தினம்கூட மின்வெட்டு அமுலானது. இன்றும் அமுலாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. நாளையும் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படலாம். அரசாங்கத்தினதும், பொறுப்புகூற வேண்டிய தரப்புகளினதும் இந்த அணுகுமுறையை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

அதேவேளை, மின்கட்டணத்தை அதிகரித்துக்கொள்வதற்காக மாணவர்களை பணயக்கைதிகளாக பயன்படுத்தும் போக்கும் ஆபத்தானது. நாட்டு மக்கள் திண்டாடும் நிலையில் 60 முதல் 70 சதவீத மின்கட்டண உயர்வை மக்கள் எவ்வாறு சகித்துக்கொள்வது? சிறு மற்றும் நடுத்தர வியாபாரிகளுக்கும் இந்த கட்டண உயர்வு மரண அடியாக அமையப்போகின்றது.” எனவும் குறித்த அறிக்கையில் ராம் சுட்டிக்காட்டியுள்ளார்.






## “RHYTHM OF HARMONY”

இந்தியாவின் 74ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு, கொழும்பில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம், கொழும்பு–பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் இசை நிகழ்வு ஒன்றை நேற்று முன்தினம்(24) நடத்தியது. இலங்கையின் முன்னணி இசை நிறுவனமான ‘Stigmata’ மற்றும் இந்திய இசைக்குழுவான UDX என்பன ஒரே மேடையில் இசை நிகழ்ச்சியை நடத்தியிருந்தன. நிகழ்வின் பிரதம அதிதியாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே ஆகியோர் கலந்துகொண்டனர்.

# சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியை தாக்கிய உயர் பொலிஸ் அதிகாரி

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரால் தாக்கப்பட்டப் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.



கெப்பத்திகொல்லாவ பொலிஸ் நிலையத்தின் பதில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகப் பணியாற்றிக்கொண்டிருந்தபோதே தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் கூறியுள்ளார்.

நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் வழக்கு விசாரணை தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தனது காரியாலயத்துக்கு வருமாறு தாக்கப்பட்டதாகக் கூறும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியை அழைத்துள்ளார்.

இதன்போதே தான் தாக்கப்பட்டதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ள நிலையில், இதனை சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் மறுத்துள்ளார்.

எவ்வாறாயினும் இச்சம்பவம் தொடர்பில் உள்ளக விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

# குவைட்டில் இருந்து 47 இலங்கையர் திரும்பினர்

டி.கே.கபில

குவைட் நாட்டுக்கு வீட்டுப் பணிப் பெண்களாகச் சென்று, வீட்டு உரிமையாளர்களால் பல்வேறு துன்புறுத்தல்களுக்கு ஆளாகி, பல்வேறு நோய் நிலைமைகளுடன் இலங்கைக்கு திரும்பி வரமுடியாமலிருந்த இலங்கைப் பணிப் பெண்கள் 47 பேர் நாடு திரும்பியுள்ளனர்.



கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக நேற்று (25) காலை இவர்கள் நாடு திரும்பியுள்ளதோடு, அநுராதபுர மாவட்டத்தைச் சேர்ந்தவர்களே இவர்களில் அதிகளவில் இருப்பதாக எமது விமான நிலைய செய்தியாளர் தெரிவித்தார்.

இலங்கைக்கு திரும்பி வர முடியாத நிலையில் மேலும் 1,300 இலங்கையர்கள் குவைட்டில் சிக்கியுள்ளதாகவும், இவர்களை விரைவாக நாட்டுக்கு அழைத்துவருவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் குவைட்டுக்கான இலங்கை தூதரகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை நாடு திரும்பியுள்ள இப்பெண்களில் பலர் தங்களது வீட்டு உரிமையாளர்களால் துன்புறுத்தப்பட்டுள்ளதோடு, அவர்களுக்கு வழங்க வேண்டிய சம்பளத்தையும் முறையாக வழங்காத நிலையில், அந்த வீட்டிலிருந்து தப்பித்து இலங்கை தூதரகத்தில் தஞ்சடைந்திருந்த நிலையிலேயே நாடு திரும்பியுள்ளனர்.

# போலி இலக்க ஜீப் சிக்கியது

சட்டவிரோதமாக பதிவு செய்யப்பட்ட வாகன இலக்கத்தைக் கொண்ட ஒரு கோடி ரூபாய் பெறுமதியான அதிசொகுசு ஜீப் வண்டியுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.



பிலியந்த - கோகுந்தர பொருளாதார மத்திய நிலையத்துக்கு அருகில் சந்தேகநபரை கைது செய்ததாக பாணந்துறை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த சொகுசு ஜீப் வண்டியானது கொழும்பில் உள்ள பிரபல பெருந்தோட்ட நிறுவனத்தைச் சேர்ந்த வாகனமொன்றின் இலக்கத்தைப் பொறுத்திக்கொண்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய வாகனத்துடன் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதோடு, வாகனத்தை சோதனையிட்டதில் போலியான ஆவணங்கள் பலவும் சிக்கியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கம்பஹா பிரதேசத்தில் உள்ள வாகன விற்பனை நிலையமொன்றில் உள்ள இதற்கு முன்னர் வாகன மோசடி தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்த நபர் ஊடாக போலியான ஆவணங்களை தயாரித்துள்ளதாக சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# “தூங்க வேண்டாம்”

## OICகளுக்கு பாடமெடுத்த டிரான் அலஸ்

நாடுமுழுவதிலும் உள்ள பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கான மாநாடு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தலைமையில் சுஹூறு பாயவில் உள்ள பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் கலந்துகொள்வதற்காக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக, பொலிஸ்மா அதிபர் சீ.டீ.விக்ரமரத்ன, அரச புலனாய்வுப் பிரிவின் தலைவர் சுரேஷ் சலே, பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் உள்ளிட்ட 509 பேரும், 250 பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் ஒன்லைன் ஊடாகவும் கலந்துகொண்டிருந்ததாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்போது அரச புலனாய்வுப் பிரிவின் தலைவர் சலே, தேசியப் பாதுகாப்பு தொடர்பில் தகவல்களை முன்வைத்து உரையாற்றினார்.

கடந்த 8 மாதங்களுக்குள் பொலிஸார் எதிர்நோக்கிய பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வுக் காண முடிந்ததாகவும், போதைப்பொருள் ஒழிப்பு, பாதாள உலகக் கோஷ்டியினரை ஒழிப்பதற்கு அனைத்துப் பொலிஸாரும் மிகுந்த அர்ப்பணிப்புடனும் நேர்மையாகவும் செயற்பட வேண்டுமென தான் எதிர்பார்ப்பதாகவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் கேட்டுக்கொண்டார்.



இதேவேளை, இந்த மாநாட்டுக்கு வந்துள்ள பல பொலிஸார் தூங்கிக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் யார் என்பதை நான் தெரிந்துகொண்டேன். பெரும் நிதியை செலவிட்டு மேற்கொள்ளப்படும் இதுபோன்ற மாநாடுகளில் தூங்கிக்கொண்டிருக்காது, நன்றாக செவிமெடுத்து, மாநாட்டில் பயனடைந்து செல்ல வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

வீடமைப்புக்கான நிதி வழங்கப்படாத நிலையில்

# தற்காலிக கொட்டகைகளில் குடும்பங்கள் அவதி

சுப்பிரமணியம் பாஸ்கரன்



கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உரிய வாழ்விட வசதிகளின்றி, ஆயிரத்தும் மேற்பட்ட குடும்பங்கள் கடந்த பல ஆண்டுகளாக, தற்காலிக கொட்டகைகளில் வாழ்ந்து வருகின்றன.

தொடர் யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டு, மீள்குடியேறி வாழ்ந்து வரும் குடும்பங்களுக்கு, 2018, 2019 ஆம் ஆண்டுகளில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டன.

ஆனால், எந்த வீட்டுக்கும் முழுமையான நிதி வழங்கப்படாது, முதல் கட்டம், இரண்டாம் கட்டம் என, பகுதிக் கொடுப்பனவுகள் மாத்திரமே வழங்கப்பட்டன. ஆனால், இந்த வீட்டுத் திட்டங்களை குறிப்பிட்ட காலத்துக்குள் நிறைவுறுத்த வேண்டும் என்ற அதிகாரிகளின் அழுத்தம் காரணமாக, அந்த வீடுகளை அமைப்பதில் பெரும் சவால்களை அந்தக் குடும்பங்கள் சந்தித்தன.

குறிப்பாக, குறிப்பிட்ட காலத்துக்குள் வீட்டுத் திட்டத்தை நிறுத்த வேண்டும் என்ற காரணத்துக்காக தங்களிடமிருந்த நகைகள், பொருட்களை விற்றும், வங்கிகளில் கடன் பெற்றும் எல்லாவற்றுக்கும் மேலாக நுண்நிதி நிறுவனங்களிடம் இருந்து கடன்களைப் பெற்றும் வீடுகளைக் கட்டினார்கள். ஆனால், இந்த வீடுகளுக்கு முதற்கட்ட கொடுப்பனவு, இரண்டாம் கட்ட கொடுப்பனவு என்பன மாத்திரமே வழங்கப்பட்டுள்ளது. ஏனைய கொடுப்பணவுகள் எதுவும் வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய நான்கு மாவட்டங்களிலும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் வழங்கப்பட்ட வீட்டுத் திட்டங்களுக்கான முழுமையான நிதி வழங்கப்படாத நிலையில், 11 ஆயிரத்து 829 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.





முல்லைத்தீவு ஊடக அமையத்தினரால் அனுஷ்டிக்கப்பட்ட

## 'கறுப்பு ஜனவரி'

சண்முகம் தவசீலன்

ஜனவரி மாதம், இலங்கையில் ஊடகத்துறையைப் பொறுத்த வரையில் கறைபடிந்த மாதமாகவே காணப்படுகிறது. பல்வேறு ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள், ஊடகவியலாளர்கள் கொலை, ஊடகவியலாளர்கள் காணாமல் ஆக்கப்பட்டமை என்பவற்றுக்கு நீதி கோரி, வருடம் தோறும் ஜனவரி மாதத்தை 'கறுப்பு ஜனவரி'யாக கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

அந்தவகையில், இவ்வருடமும் கறுப்பு ஜனவரியை அனுஷ்டிக்கும் வகையில், 2006ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜனுடைய 17ஆம் ஆண்டை நினைவு கூரும் முகமாகவும் 2010ஆம் ஆண்டு கடத்தப்பட்ட ஊடகவிலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் நினைவாகவும் முல்லைத்தீவு ஊடக அமையத்தினர், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு நகர்ப் பகுதிகளில் துண்டுப்பிரசுரம் விநியோகிக்கும் நடவடிக்கையில் நேற்று முன்தினம் (24) ஈடுபட்டனர்.

இதேவேளை, முல்லைத்தீவு ஊடக அமையத்தில் ஊடகவியலாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜனுடைய 17ஆம் ஆண்டு நினைவேந்தலும் ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவினுடைய 14ஆம் ஆண்டு நினைவேந்தலும் 2010ஆம் ஆண்டு, கொழும்பில் வைத்து கடத்தி காணாமல் ஆக்கப்பட்ட பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டு 13 ஆண்டு நினைவு நிகழ்வும் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

## கொக்கிளாயில் அம்பருடன் ஒருவர் கைது

செ. கீதாஞ்சன்

முல்லைத்தீவு, கொக்கிளாய் பிரதேசத்தின் முகத்துவாரம் பகுதியில் உள்ள வீடொன்றில் அம்பர் (திமிங்கிலத்தில் இருந்து கிடைக்கப்பெறும் பெறுமதியான பொருள்) இருப்பதாக கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய, முல்லைத்தீவு விசேட அதிரடிப்படையின் உதவியுடன் முல்லைத்தீவு வனஜீவராசிகள் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் 1.85 கிலோ கிராம் நிறையுடைய அம்பர் கைப்பற்றப்பட்டது. சந்தேகத்தின் அடிப்படையில் குறித்த வீட்டின் உரிமையாளர், முல்லைத்தீவு வனஜீவராசிகள் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டு, நேற்று முன்தினம் (24) முல்லைத்தீவு நீதிமன்றத்தில் முன்னிலைபடுத்தபட்டார்.

சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து, ஒரு இலட்சம் பெறுமதியான சரீரப் பிணையில் விடுவித்ததுடன் அம்பரை மேலதிக பகுப்பாய்வுக்காக நாரா நிறுவனத்துக்கு அனுப்புவதற்கும் நீதிமன்று உத்தரவிட்டது.

## குமுழமுனைக்கு பஸ் சேவைகளை அதிகரிக்கவும்

நடராசா கிருஸ்ணகுமார்

முல்லைத்தீவு, குமுழமுனை கிராமத்துக்கு பஸ் சேவைகளை அதிகரிக்குமாறு இலங்கை போக்குவரத்து சபையின் வட பிராந்திய முகாமையாளருக்கு குமுழமுனை கிராம அபிவிருத்திச் சங்கம் கடிதம் அனுப்பி வைத்துள்ளது.

அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: குமுழமுனை கிராமத்துக்கான இலங்கை போக்குவரத்து சபை, தனியார் பஸ் சேவை இரண்டும் சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தன. ஒரு வருடத்துக்கு மேலாக, இவ்விரண்டு சேவையும் இடம் பெறுவதில்லை. இதனால் எமது மக்கள் பெரும் சிரமத்துக்கு மத்தியில் பயணத்தைத் தொடர்கின்றார்கள்.

அது மட்டுமல்லாது ஆறுமுகத்தான்குளம், முறிப்பு கிராமங்களில் இருந்து மாணவர்கள் பாடசாலைகளுக்கு செல்வதற்கு சிரமப்படுகின்றார்கள். மாஞ்சோலையில் உள்ள முல்லைத்தீவு பொது வைத்தியசாலை, வங்கி, அரச அலுவலகங்கள் என எல்லாச் சேவைகளையும் பெறுவதற்கும், குமுழமுனை கிராமத்தில் இருந்து முல்லைத்தீவு, தண்ணிரூற்று போன்ற இடங்களுக்கு செல்ல வேண்டி உள்ளதால், எமது கிராமத்துக்கான பஸ் சேவைகளை அதிகரிக்குமாறு வேண்டுகின்றோம் எனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கிளிநொச்சியில் மாணவர்களுக்கான நீச்சல் பயிற்சிகள்



நடராசா கிருஸ்ணகுமார்

கிளிநொச்சி நீர்விளையாட்டுச் சங்கத்தால் மாணவர்களுக்கான நீச்சல் பயிற்சிகள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகின்றது. இதுவரையில் 40 மாணவர்கள் கொண்ட ஆறு அணிகள் பயிற்சியை நிறைவு செய்துள்ளன. இங்கு பயிற்சி பெற்ற மாணவர்கள், மாகாண மட்டப் போட்டிகளில் வெற்றி பெற்று, தேசிய மட்டப் போட்டிகளில் பங்கு கொண்டுள்ளனர்.

செவ்வாய்க்கிமை (24) ஏழாவது அணிக்கான பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. பரந்தன் இந்து மகா வித்தியாலய மாணவர்கள் ஏழாவது அணி மாணவர்களாக பயிற்சிகளில் இணைந்துள்ளனர். இவர்களுக்கான பயிற்சிக்குரிய அனுசரணையை பரந்தன் இந்து ம.வி பழைய மாணவர் சங்க சர்வதேச ஒன்றியத்தினர் வழங்கியுள்ளனர்.

2023 பெப்ரவரி முதல் வாரத்தில், 100 பேர் கொண்ட நீச்சல் பயிற்சி முகாம் (ஐந்து நாள்) இலவசமாக நடைபெற உள்ளது. இணைந்து கொள்ள விரும்புவோர் கிளிநொச்சி நீர் விளையாட்டுச் சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## தலைமைத்துவ திறன்மிக்க பெண்களை அடையாளப்படுத்தி வலுவூட்டல்

பாறுக் ஷிஹான்




சமாதானமும் சமூகப்பணி நிறுவனத்தால் (PCA), நல்லிணக்கத்துக்காக சிவில், சமூக தலைமைத்தும் மிக்க பெண்களை அடையாளப்படுத்தி, வலுவூட்டும் நிகழ்வு, கல்முனை பிரதேசத்தில் செவ்வாய்க்கிழமை (24) நடைபெற்றது.

சிவில் சமூக அங்கத்தவர்கள் என்ற அடிப்படையில், கடந்த காலங்களில் தங்களின் வகிபாகம் எவ்வாறு காணப்பட்டது? தற்காலத்தில் சிவில் சமூகத்தின் வகிபாகம் எவ்வாறு காணப்பட வேண்டும் என்ற விடயமும் கல்முனை பிரதேசத்தில் நல்லிணக்கத்துக்கு சவாலாக காணப்படுகின்ற விடயங்களை அடையாளம் கண்டு, எவ்வாறு எதிர்காலத்தில் அவற்றுக்கான சமூக முன்னெடுப்புகளை மேற்கொள்வது தொடர்பாக இதன் போது கலந்துரையாடப்பட்டது .

கல்முனை பிரதேச நல்லிணக்கக்குழு மற்றும் அம்பாரை மாவட்ட நல்லிணக்ககுழு இணைப்பாளர் எஸ்.எல் அப்துல் அஸீஸின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந் நிகழ்வில், சமாதானமும் சமூகப்பணி நிறுவனத்தின் நிகழ்ச்சி திட்ட முகாமையாளர் டி. ராஜேந்திரன், அரச சார்பாற்ற நிறுவனங்களின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் ஐ.எல். எம் இர்பான், நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர்களான கே.ட .ரோகினி, எம்.எல்.ஏ மாஜீத் ஆகியோர் கலந்து கொண்டனர் .



இந்தியாவை விட

## இலங்கையில்தான் கலை ஆர்வம் அதிகம்

வி.ரி சகாதேவராஜா

இந்தியாவில் கலை பிறந்து இருக்கலாம்; ஆனால், இலங்கையில் தான் கலை ஆர்வம் மிகவும் கூடுதலாக இருக்கிறது என அவுஸ்திரேலியாவிலிருந்து வருகை தந்த நடன கலைஞர் சிதம்பரம் ஆர் சுரேஷ் தெரிவித்தார். அவருடன் மனைவி நடன நர்த்தகி ஷோபனா சுரேஷும் செவ்வாய்க்கிழமை (24) மாலை காரைதீவுக்கு வருகை தந்திருந்தனர் .

காரைதீவு விபுலானந்தா மணிமண்டபத்தில் அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. சுவாமி விபுலானந்தர் பிறந்த இல்லத்தையும் அரும்பொருள் காட்சியகத்தையும் பார்வையிட்டனர்.

நடன கலைஞர் சிதம்பரம் ஆர் சுரேஷ் அங்கு மேலும் பேசுகையில்கூறியதாவது: தமிழ்நாட்டில் உள்ள மாணவர்களை விட இலங்கையில் உள்ள மாணவர்கள் கலையில் ரொம்ப ஆர்வமாக இருக்கிறார்கள். எனக்கு யாழ்ப்பாணம் மட்டக்களப்பு பல்கலைக்கழகங்களில் நிறைய நண்பர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் வெளிநாடுகளில் பல கலைப் பள்ளிகளை நடத்தி வருகின்றார்கள் என்றார்.

நடன கலைஞர் சுரேஷ், அவுஸ்திரேலியா நாட்டில் 'சமர்பணா' நாட்டிய பள்ளியை நடத்தி வருகிறார். இவரது மனைவி திருமதி சோபனா சுரேஸ் சிலம்பு கலையிலும் சிறந்தவர். '108 பரதநாட்டிய ஜதிகள்' எனும் நூலை தமிழ் , ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிட்டுள்ளார்.

## சிசுவை பிரசவித்து குப்பையில் எறிந்தார் 15 வயது சிறுமி

### கர்ப்பமாக்கிய இளைஞனும் கைது

கனகராசா சரவணன்

ஏறாவூர் பிரதேசத்தில் பாழடைந்த காணியில், உயிரிழந்த நிலையில் சிசு ஒன்றை செவ்வாய்க்கிழமை (24) காலையில் மீட்டுள்ளதுடன் சிசுவை பிரசவித்த 15 சிறுமியையும் அந்தச் சிறுமியை கர்ப்பமாக்கிய சுகாதார டெங்கு ஒழிப்பு பிரிவில் கடமையாற்றும் ஒருவரையும் கைது செய்துள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

ஏறாவூர் சுகாதாரதுறையில் டெங்கு ஒழிப்பு பிரிவில் கடமையாற்றும் ஒருவர், புதிய காட்டுப்பள்ளி வீதியில் உள்ள 15 வயதுடைய சிறுமியின் வீட்டை சோதனை செய்யும்போது சிறுமியுடன் தொடர்பு ஏற்பட்டதையடுத்து சிறுமி கர்ப்பமாகியுள்ளார்.

கர்ப்பமடைந்த சிறுமி பாடசாலை செல்வதை நிறுத்திய நிலையில், சம்பவதினம் காலை தனது வீட்டில் குழந்தையை பிரசவித்துள்ளார். பிறந்த சிசுவை, சிறுமியின் வீட்டின் முன்னால் உள்ள பாழடைந்த காணியில் வீசி எறிந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசரணையில் தெரியவந்துள்ளது.

இதையடுத்து குறித்த சிறுமியையும் சிறுமியை கர்ப்பமாக்கிய 29 வயதுடையவரையும் கைது செய்துள்ளதுடன் சிறுமி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.



மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி உடன்படிக்கை

## மலேசிய –மட்டக்களப்பு ரோட்டரி கழகங்கள் கைச்சாத்து

வி.ரி சகாதேவராஜா

மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்வி, சுகாதார சமூகநல அபிவிருத்தித் திட்டங்களுக்கான பல கோடி ரூபாய் பெறுமதியான உடன்படிக்கை மலேசிய - மட்டக்களப்பு றோட்டரி கழகங்களுக்கு இடையே, நேற்று முன்தினம் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த உடன்படிக்கையில் மட்டக்களப்பு ரோட்டரிக் கழகத் தலைவர் ரோட்டரியன் பு. ரமணன், கோலாலம்பூர் மத்தி ரோட்டரிக் கழக தலைவி றோட்டரியன் அஞ்சலினா ஆரோக்கியசாமி ஆகியோர் கைச்சாத்திட்டனர். மேலும், மலேசிய மாவட்ட ரோட்டரி ஆளுநர் ராஜசேகரன் பிண்டி, கனகேஸ்வரி சுப்பையா ஆகியோரும் கலந்து சிறப்பித்தார்கள்.

செய்வினை எடுக்க வந்த பெண் பூசாரி

## பூஜை தட்டில் வைத்த பணம், தங்கத்துடன் மாயம்

கனகராசா சரவணன்

கொக்கட்டிச்சோலை, கடுக்காய்முனையைச் சேர்ந்த பெண், மட்டக்களப்பு நகரில் வாழ்ந்துவரும் அறிமுகமானவர்களது வீட்டுக்கு 2022 டிசெம்பர் 22ஆம் திகதி சென்றுள்ளார்.

இதன்போது, அந்த வீட்டில் செய்வினை இருப்பதாக பெண் போலி பூசாரி தெரிவித்ததையடுத்து வீட்டின் உரிமையாளரும் பூஜை செய்ய உடன்பட்டார்.

இதையடுத்து, செய்வினையை அகற்றுவதற்கான பூஜை ஏற்பாடுகள் செய்யப்பட்ட போது, பூஜை தட்டில் 60 ஆயிரம் ரூபாய் பணமும் தங்க ஆபரணங்களும் வைக்கவேண்டும் எனக் கோரியதையடுத்து, அதை வெள்ளை துணியால் மூடிக்கட்டியவாறு பூஜை அறையில் பூஜை நடைபெற்று முடிந்தது.

இதன் பின்னர், பூசாரி அந்த அறைக் கதவை மூடிவிட்டு, "கதவை 10 தினங்களுக்கு திறக்க கூடாது; அங்கு நாக கன்னி உலாவருவார். 10 தினங்களின் பின்னர், நான் வந்து கதவை திறந்து, பூஜை தட்டை அவிழ்துத் தருவேன்" எனக்கூறி சென்றுள்ளார்.

10 நாள்கள் முடிந்ததும் வீட்டின் உரிமையாளர், பூசாரியின் அலைபேசிக்கு அழைப்பை ஏற்படுத்திய போது, அந்தத் தொலைபேசி நிறுத்தப்பட்டிருந்தது. பின்னர், பூஜை அறைக் கதவை திறந்து, துணியால் கட்டி வைக்கப்பட்ட பூஜை தட்டை அவிழ்த்துப் பார்த்தபோது, தட்டில் வைக்கப்பட்ட 60 ஆயிரம் ரூபாயையும் தங்க மோதிரத்தையும் பெண் பூசாரி திருடிச்சென்றுள்ளமை தெரியவந்தது.

பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து குறித்த பெண் கைது செய்யப்பட்டதுடன் இவருக்கு கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவில் ஆறுக்கும் மேற்பட்ட வழக்குகள் இருப்பதாகவும் பொலிஸார் கூறினர்.

கல்குடா தொகுதி முஸ்லிம்களின்

## வரலாற்றுத் தொகுப்பு நூல்

எச்.எம்.எம் பர்ஸான்

கல்குடா தொகுதி முஸ்லிம்களின் வரலாற்று தொகுப்பு எனும் நூலைத் தொகுத்து வெளியிடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிழக்குப் பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர் எம்.ரீ.எம் றிஸ்வி மஜீதி தலைமையிலான குழு தொகுக்கவுள்ள இந்த நூலில் கல்வி, கலாசாரம் உள்ளிட்ட பல்வேறுபட்ட வரலாற்று தொகுப்புகள் உள்ளடக்கப்படவுள்ளன.

கல்வி வரலாறு தொடர்பாகத் தகவல் திரட்டும் பணியில், ஓய்வுபெற்ற பிரதி கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.எம் அஸ்ரப், ஓய்வுபெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.ஏ காதர் ஆகியோர் செயற்பட்டு வருகின்றனர்.




# பாதசாரிகளுக்கு இடைஞ்சலான பெயர்ப்பலகை

■ என்.ஆராச்சி

கேகாலை நகரின் பொது வர்த்தக சந்தைக்கு முன்பாக நடைபாதையில் அமைக்கப்பட்டுள்ள பெயர்ப்பலகையால் பாதசாரிகள் பெரிதும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் இரண்டு வாரத்துக்கு முன்னர் குறித்த பெயர்ப்பலகை அமைக்கப்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பெயர்ப்பலகை பாதசாரிகளுக்கு இடைஞ்சலை ஏற்படுத்துவதாகவும் இதனை இங்கிருந்து அப்புறப்படுத்தி வேறோர் இடத்தில் பொருத்துமாறும் பொதுமக்களும் பாதசாரிகளும் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## இராசகலை தமிழ் மக்களின் பாதுகாப்பை

# இ.தொ.கா உறுதி செய்யும்

பலாங்கொடை, இராசகலையில் உள்ள தமிழ் மக்களின் பாதுகாப்பை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உறுதிசெய்யும் என காங்கிரஸின் அரசியல் அமைப்பாளர் ரூபன் பெருமாள் தெரிவித்துள்ளார்.

குறித்த தோட்டத்தில் தமிழ் மற்றும் பெரும்பான்மை இன இளைஞர்களுக்கு இடையில் ஏற்பட்ட சம்பவம் தொடர்பில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அரசியல் அமைப்பாளர் ரூபன் பெருமாளுக்கு தெரிவித்ததை தொடர்ந்து, அவர் அந்த தோட்டத்துக்கு நேரடியாக சென்று மக்களை சந்தித்துள்ளார்.

இச்சம்பவமானது, முதலில் தமிழ் இளைஞர்களே தாக்கப்பட்டுள்ளதாகவும் அதனைத் தொடர்ந்து இரு தரப்பினருக்கும் இடையில் மோதல் இடம் பெற்றதுடன், இச்சம்பவத்தில் மூன்று தமிழ் இளைஞர்கள் தாக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

தாக்கப்பட்ட தமிழ் இளைஞர்கள் மற்றும் பெரும்பான்மையின இளைஞர்கள் பலாங்கொடை



போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதனை தொடர்ந்து, இச்சம்பத்துடன் தொடர்புடைய தமிழ் இளைஞர்களை மாத்திரம் பொலிஸார் கைது செய்துள்ளதுடன், இதுவரை பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த எவரும் கைது செய்யப்படவில்லை என பிரதேச மக்கள் ரூபன் பெருமாளின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

மேலும் பிரதேசத்தில் வாழும் தமிழ் மக்கள், நகரத்திற்கு செல்ல முடியாத வகையில் அச்சுறுத்தல்களும் இருப்பதாக பிரதேசவாழ் மக்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமானின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளதுடன், இரத்தினபுரி மாவட்டத்திற்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபருக்கு முறைப்பாடு செய்துள்ளதாகவும் ரூபன் பெருமாள் தெரிவித்தார்.

# மஹா கும்பாபிஷேகம்

■ துவாரகஷான்

டயகம மேற்கு ஐந்தாம் பிரிவு அருள்மிகு ஸ்ரீ கருமாரியம்மன் ஆலய நூதன பிரதிஷ்டா அஷ்டபந்தன ஏககுண்டபக்ஷ மஹா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா, நாளை (27) வெள்ளிக்கிழமை நடைபெற உள்ளது.

விநாயகர் வழிபாட்டுடன் நேற்று (25) காலை 9.30 மணியளவில் கிரியைகள் ஆரம்பமாகின.

26ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.45 மணி முதல் மாலை 4.00 மணி வரை அடியார்கள் விக்கிரகங்களுக்கு எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு நடைபெறும்.

வெள்ளிக்கிழமை காலை 11.15 மணிக்கு அம்மனுக்கு குடமுழுக்கு கும்பாபிஷேக விழா நடைபெறும்.

## அமரர் ஆறுமுகனின் மறைவின் பின்னர்

# மறந்து போன டயகம வீதி புனரமைப்பு

■ துவாரகஷான்

லிந்துலை நகரத்தில் இருந்து டயகம நகரம் வரை செல்லும் 21 கிலோ மீற்றர் வீதியானது, மழைக்காலங்களில் வீதி எது, குழி எதுவென தெரியாத அளவிற்கு சேதமடைந்து காணப்படுகின்றது.

தலவாக்கலை நகரத்திலிருந்து டயகம நகருக்கு பஸ்ஸில் செல்வதற்கு ஒரு மணித்தியாலயம் எடுத்த காலம் மாறி, தற்போது வீதி பழுதடைந்துள்ளதால் இரண்டு மணித்தியாலம் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

2014ஆம் ஆண்டு அமைச்சராக இருந்த அமரர் ஆறுமுகம் தொண்டமானால் வீதி நிர்மாண பணிக்கான அடிக்கல் நாட்டப்பட்டு, வீதியின் இரண்டு பக்கங்களும் அகலப்படுத்தும் பணியும் மும்முரமாக நடைபெற்ற போதிலும் அமைச்சரின் மறைவுக்கு பின்னர் பணிகள் இடைநிறுத்தப்பட்டன.

இந்த வீதி அபிவிருத்திக்காக அரசாங்கத்தால் பல கோடி ரூபாய் நிதி ஒதுக்கிடும் செய்யப்பட்டிருந்த நிலையில், ஆட்சி மாற்றத்தால் இந்த வீதி அபிவிருத்தி பணிகள் கைவிடப்பட்டு இன்று மக்களின் போக்குவரத்துக்கு பாரிய பிரச்சினையை எதிர்நோக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, பிரதேச மக்களின் போக்குவரத்து நலம் கருதி பாதையை புனரமைத்து தருவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன் வர வேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.









# எண்ணெய்க்காப்பு

எட்டியாந்தோட்டை ஸ்ரீ விநாயகர் ஆலயத்தில் கடந்த 22ஆம் திகதி முதல் மஹா கும்பாபிஷேக பெருவிழாவின் பூர்வாங்க கிரியைகள் ஆரம்பமாகி நடைபெற்றுவரும் நிலையில், 'எண்ணெய்க்காப்பு' சாத்தும் நிகழ்வு இன்றும் காலை 8 மணிமுதல் இரவு 10 மணிவரை நடைபெறுகின்றது.

(எஸ்.கே குமார்)

## ரதெல்ல குறுக்கு வீதியில்

# கனரக வாகனங்கள் பயணிக்க அனுமதி?

■ பி.கேதீஸ்

கனரக வாகனங்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள நானுஓயா- ரதெல்ல குறுக்கு வீதியில் மீண்டும் கனரக வாகனங்களை செலுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தி வருவதாக நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொட தெரிவித்தார்.



நுவரெலியா பிரதான வீதி பொறியியலாளர் ஊடாக வீதிகள் அமைச்சிடம் தொழில்நுட்ப அறிக்கை கோரப்பட்டுள்ளதாகவும், அறிக்கை கிடைத்த பின்னர் ரதெல்ல குறுக்கு வீதியில் கனரக வாகனங்களை செலுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

தற்போது குறித்த வீதியுடனான கனரக போக்குவரத்துக்கு தற்காலிகமாக தடைவிதிக்கப்பட்டு உள்ளதாகவும் விபத்தின் காரணமாக வீதியை நிரந்தரமாக மூட முடியாது. அப்படியென்றால் ரம்பொட வளைவு, எல்ல வளைவு, கடுகண்ணாவ வளைவு, கண்டி- கலிகமுவ வீதி எனபவற்றில் அடிக்கடி விபத்துகள் இடம்பெறுகின்றன. இந்த வீதிகளையும் மூட வேண்டும்.

ரதெல்ல குறுக்கு வீதியை தொடர்ச்சியாக மூட முடியாது. இந்த வீதி இரு பாதைகளாக விரிவுபடுத்தப்பட்டு காபட் இடப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. இங்கு பாதுகாப்பு வேலிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

நுவரெலியா பிரதேச வாகன சாரதிகளால் இந்த வீதியில் விபத்துகள் ஏற்படுவது மிகவும் குறைவு. ஆனால், வெளிமாவட்டங்களிலிருந்து வரும் வாகன சாரதிகளினால் அதிகளவான விபத்துகள் ஏற்படுகின்றன.

தற்போது வீதிப் போக்குவரத்து பிரிவின் ஊடாக வீதி அனுமதிப் பத்திரம் பெற்ற பல பஸ்கள் உள்ளன. ரதெல்ல குறுக்கு வீதியை திறந்து வைக்குமாறு அவர்களும் பாடசாலை பஸ் சங்கங்களும் எனக்கும் ஜனாதிபதிக்கும் எழுத்து மூலம் அறிவித்துள்ளார்கள் என்றார்.

## நல்லத்தண்ணியில்

# ஹோட்டல்களை சோதனையிட நடவடிக்கை

■ சுதத்.எச்.எம்.ஹேவா

நல்லத்தண்ணி- சிவனொளிபாதமலை வீதியிலுள்ள ஹோட்டல்களை பரிசோதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக நல்லத்தண்ணி பொது சுகாதார பரிசோதகர் எஸ். பாஸ்கரன் தெரிவித்தார்.

சிவனொளிபாதமலை யாத்திரைக்கு வருபவர்களுக்கு சுத்தமான உணவு வழங்குவது இந்த ஹோட்டல் உரிமையாளர்களின் பொறுப்பாகும். எனவே, இங்குள்ள ஹோட்டல்களை அடிக்கடி பரிசோதிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

இவ்வாறு ஹோட்டல்களை சோதனை செய்யும் போது, அசுத்தமாக உணவு தயாரிக்கும் அல்லது கெட்டுப்போன உணவுகளை விற்பனை செய்யும் ஹோட்டல் உரிமையாளர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என எஸ். பாஸ்கரன் மேலும் தெரிவித்தார்.

# புலனாய்வு ஊடக அறிக்கையிடல் செயலமர்வு

■ மொஹொமட் ஆஸிக்

கண்டியில் ஊடகவியலாளர்களுக்கான புலனாய்வு ஊடக அறிக்கையிடல் தொடர்பான செயலமர்வு 'சமாதானம்' அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அம்பிட்டிய, டெவோன் ஹோட்டலில் ஒழுங்கு செய்திருந்த இச்செயலமர்வில், களனி பல்கலைக்கழக வெகுஜனத் தொடர்பு மற்றும் ஊடகவியல்துறைப் பேராசிரியர் ரோகன லக்ஷ்மன் பியதாஸ வளவாளராகக் கலந்துகொண்டிருந்தார்.

இச்செயலமர்வில் கண்டி, மாத்தளை, குருநாகல், கேகாலை, நுவரெலியா உள்ளிட்ட பல பகுதிகளைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் பங்கு கொண்டனர்.

## ஸ்ரீ.ல.சு கட்சி

# அரசியல் தந்திரத்தை நன்கு கற்றுள்ளது

■ எஸ்.கணேசன்

விழுந்தாலும் மீண்டெழக்கூடிய அரசியல் தந்திரம், மந்திரத்தை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி நன்கு கற்றே வைத்துள்ளது என தெரிவித்த சுதந்திரக் கட்சியின் நுவரெலியா தொகுதி அமைப்பாளரும், சமூக சேவையாளருமான சதாநந்தன் திருமுருகன், இந்த உள்ளூராட்சி மன்ற தேர்தல் ஊடாக, எமது கட்சி எழுச்சிபெற்று வீறுநடை போடும் என்றார்.

கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே திருமுருகன் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது; நாட்டுக்காக முன்கள போராளிகள் போல் பாடுபட்டுவரும் மலையக மக்கள் போற்றப்பட வேண்டியவர்கள். ஆனால், எமது பெருந்தோட்ட மக்கள் வஞ்சிக்கப்படுகின்றனர். அவர்களின் வாழ்க்கைத்தரம் என்பது இன்னும் மேம்படவில்லை. சிறார்கள் மத்தியில் போசாக்கின்மை பிரச்சினையும் நீடிக்கின்றது.

இனியும் இந்நிலைமை நீடிக்க இடமளிக்க முடியாது. எனவேதான் மாற்றமொன்றை ஏற்படுத்த சுதந்திரக்கட்சி ஊடாக அரசியல் களத்தில் புகுந்துள்ளேன்.

பல சமூகசேவைகளை செய்து, கல்வி புரட்சிமூலம் சமூகமாற்றத்தை ஏற்படுத்திவருகின்றேன். அதனை அடுத்தக்கட்டம் நோக்கி கொண்டுசெல்லவே அரசியலுக்குள் வந்தேன். உள்ளூராட்சிமன்ற தேர்தலில் எமது பிரதிநிதிகள் நுவரெலியா மாவட்டத்தில் கை சின்னத்தில் களமிறங்குகின்றனர். மலையக மக்களுக்கு நிச்சயம் நாம் கை கொடுப்போம். எமது கட்சி சின்னம்கூட கைதான்.

எமது கட்சி தலைவர் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்த நல்லாட்சிகாலத்தில்தான் மலையகத்தில் தனிவீட்டுத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது. மக்களுக்கு காணி உரிமை வழங்கப்பட்டது. சட்டமூலங்கள் நிறைவேற்றப்பட்டன. இப்படி மக்கள் துயர் அறிந்த அவர் நிச்சயம் மலையக மக்களை கைவிடமாட்டார். நாமும் அவருடன் இணைந்து மலையகத்தில் நிச்சயம் மாற்றத்தை ஏற்படுத்துவோம் என்றார்.



# பல நாள் திருடர்கள் சிக்கினர்

■ சுமணசிறி குணதிலக

வெல்லவாய பிரதேசத்தில் பல இடங்களிலும் கடந்த காலங்களில் இடம்பெற்று வந்த பல்வேறு திருட்டுச் செயல்களில் ஈடுபட்டு வந்த நால்வர் வெல்லவாய பொலிஸாரால் சந்தேகநபர்கள் நேற்று முன்தினம்(24) கைதுசெய்யப்பட்டனர்.

அலைபேசி விற்பனை நிலையம், தங்கநகை விற்பனை நிலையம், சமுர்த்தி வங்கி உள்ளிட்ட சில வர்த்தக நிலையங்களை உடைத்து பல இலட்ச ரூபாய்கள் சந்தேகநபர்களால் கொள்ளையிடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

# அதிகரிக்கும் குற்றச்செயல்களும் பொலிஸாரின் முன்னுள்ள சவால்களும்

கொலை,கொள்ளை உள்ளிட்ட குற்றச்செயல்கள் தொடர்பிலான செய்திகள், ஏனைய செய்திகளை விடவும் விஞ்சிவிட்டன. அந்தளவுக்கு சம்பவங்கள் இடம்பெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன. நமது நாட்டில் மட்டுமன்றி, உலகநாடுகளிலும் குற்றச்செயல்களுக்கு குறைவே இல்லை.

அமெரிக்காவை பொறுத்தவரையில் துப்பாக்கிப் பிரயோகங்கள் நாளாந்தம் இடம்பெறுகின்றன. நாயொன்றால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் நபரொருவர் மரணமடைந்த சம்பவமும் அமெரிக்காவில் இடம்பெற்றுள்ளது.

மரணமடைந்த நபர் தன்னுடைய வாகனத்தின் பின்னிருக்கையில் பாதுகாப்பற்ற முறையில் துப்பாக்கியை வைத்திருந்துள்ளார். பின்னிருக்கைக்குப் பாய்ந்த நாய், துப்பாக்கியின் மீது கால் வைத்ததை அடுத்து, துப்பாக்கி இயங்கியுள்ளது. அதிலிருந்து வெளியேறிய சன்னங்கள், அந்நபரை பதம் பார்த்தமையால் அவர் உயிரிழந்துள்ளார்.

அண்மையில் வெளியான 'துணிவு' படம் உள்ளிட்ட சினிமா படங்களில் இடம்பெறும் கொள்ளைக் காட்சியை பார்த்துவிட்டு, வங்கியில் கொள்ளையிட்டுள்ள சம்பவம் இந்தியா, திண்டுகல்லில் இடம்பெற்றுள்ளது. நமது நாட்டை பொறுத்தவரையில் அதற்கு ஒருபடி மேல் சென்று, வங்கியிலுள்ள பணம் வைப்பிலிடும் தன்னியக்க இயந்திரத்தையே தூக்கிச் சென்றுள்ள சம்பவம் கம்பளையில் இடம்பெற்றுள்ளது.

ஒட்டுமொத்தமாக பார்க்குமிடத்து, ஒவ்வொருநாளும் பல வியூகங்களை வகுத்து கொள்ளைகள் இடம்பெறுகின்றன. நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் வாகனங்களின் உதிரிப்பாகங்களை திருடுதல், அன்றேல் வாகனத்தையே தூக்கிச்செல்லுதல் உள்ளிட்டவற்றை குறிப்பிடலாம்.

எதிர்காலத்தில் தனியாகச் செல்வோரை பகிரங்கமாக அச்சுறுத்தி, பெறுமதியான பொருட்களை கொள்ளையிடலாம். குறுக்கு பாதையில் சென்று கொண்டிருந்த ஆசிரியையின் தங்கச் சங்கிலியும் ஹட்டனில் அபகரிக்கப்பட்டுள்ளது.

ஒருவருக்கு ஒருவர் என்ற அடிப்படையில் பொலிஸாரை நியமிக்கமுடியாது. ஆகையால் சுய பாதுகாப்பை ஏற்படுத்திக்கொள்வது சகலருடைய கடப்பாடாகும். எனினும், திட்டமிட்டு கொள்ளையில் ஈடுபடும் கும்பல்கள் தொடர்பில் தகவல்களைத் திரட்டி, அதிரடியான நடவடிக்கையில் இறங்கவேண்டியது பொலிஸாரின் பொறுப்பாகும்.

நுவரெலியா-ரதெல்ல குறுக்கு வீதியில் ஜனவரி 20ஆம் திகதி இடம்பெற்ற பாரிய வாகன விபத்தை அடுத்து, வாகனங்களை சோதனையிடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அப்போது, சில்லுக்குப் பொருத்தியிருக்கவேண்டிய நட்டுகளில் மூன்றுக்கும் மேற்பட்ட நட்டுகள் இல்லாமல் பயணித்த வாகனமொன்றும் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளது.

சோதனைகளைத் துரிதப்படுத்தி, கவனயீனமாக வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளுக்கு எதிராகவும் அந்த வாகனத்தின் உரிமையாளருக்கு எதிராகவும் அதியுட்சபட்ச தண்டனையை விதிக்கவேண்டும். அவ்வாறான தண்டனைகள், தான்தோன்றிதனமாக செயற்படும் ஏனையோருக்கு ஒரு பாடமாக இருக்கவேண்டும்.

விபத்துகளையும் கொள்ளைகளையும் தடுப்பது பொலிஸாரின் முன்னுள்ள மிகப்பெரிய சவாலாகும். அதற்கான முன்னேற்பாடுகளை திட்டமிட்ட முறையில் இறுக்கமாக நடைமுறைப்படுத்துவதே, கொள்ளையர் மற்றும் குற்றவாளிகளிடமிருந்து மக்களை பாதுகாப்பதற்கான ஒரே வழியாகும் என்பதை நினைவூட்டுகின்றோம்.




தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு

எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

ஒவ்வொருவரும் தமக்கான சிறப்பான அடையாளத்தை உருவாக்க வேண்டும். இதற்கு உலக ஞானம் தேவையானது. தாங்கள் சார்ந்த மதம், ஒழுக்கம், நல்ல நூல்களைப் படித்தல், உலக நாடுகள் பற்றி அறிந்துகொள்ளல் போன்றவற்றுடன் பரந்த அறிவில் நாட்டம் கொண்டவர்களாக முயலுதல் வேண்டும்.

கண்டபடி உணர்ச்சியின் வேகத்துக்கு அடிபணியக்கூடாது. எதிரிகளைச் சம்பாதித்தல் ஆகாது. எவரையும் மதித்து வாழ்ந்தால் எதிரிகள் உருவாகமாட்டார்கள்.

எமக்கு வரும் எதிர்ப்புகளே பாடமாகின்றன. எனவே, அரவணைக்கும் பண்பை, நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்; அகம்பாவம் கூடாது.

கைதி போல் வீட்டுக்குள் சிறைப்பட்டு வாழக்கூடாது. வெளி உலகை நோக்குக! உங்களை வரவேற்க நல்ல மனிதர்கள் காத்திருக்கிறார்கள். விலகி வாழ்வது உலகை வெறுப்பது போலாகும்.

முரண்பாடுகள் இயல்பானவை; அன்பின் மூலம் அவற்றை உடைக்கலாம். எந்த இடர்களும் நிரந்தரம் என எண்ணவே வேண்டாம்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# 'யார் கூட்டமைப்பு?'

## எனும் சர்ச்சையை புறங்கையால் தள்ளிய தமிழரசு கட்சி



புருஜோத்தமன் தங்கமயில்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், தமிழரசுக் கட்சி தனித்துப் போட்டியிடும் முடிவை எடுத்ததன் மூலம், இரா. சம்பந்தன் இதுவரை காலமும் வகித்து வந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் பதவி வறிதாகிவிட்டதாக தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (டெலோ) அறிவித்திருக்கின்றது.

புதிதாக கூட்டணி அமைத்துள்ள டெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப், ஜனநாயப் போராளிகள் கட்சி, தமிழ்த் தேசிய கட்சி ஆகியன தங்களை தமிழ்த் தேசிய கூட்டமைப்பாக முன்னிறுத்தத் தொடங்கி இருக்கின்றன. புதிய கூட்டணிக்கு ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி (D.T.N.A) என்கிற பெயரும், 'குத்துவிளக்கு' சின்னமும் இருக்கின்ற போதிலும், கூட்டமைப்பு (T.N.A) என்கிற அடையாளத்தை தம்மோடு வைத்துக் கொள்ள புதிய கூட்டணி விரும்புகின்றது. அதன் மூலம், தமிழரசுக் கட்சியோடு 'முட்டல் மோதலை' தொடர்ந்தும் பேண முடியும். அது, தமிழ் மக்களிடத்தில் கவனம் பெறுவதற்கு உதவும் என்பது ஓர் அரசியல் உத்தி.

கூட்டமைப்புக்குள் தமிழரசுக் கட்சி 60 சதவீதமான பங்கையும் மற்றைய பங்காளிக் கட்சிகள் இரண்டும் 40 சதவீதமான பங்கையும் ஆசனப் பங்கீடுகள் தொடங்கி, தொகுதிப் பங்கீடுகள் வரையில் பேணி வந்திருக்கின்றன. குறிப்பாக, டெலோவும், புளொட்டும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் ஆகியவற்றின் போது, வேட்பாளர்களை தேடிக் கொள்வதில் சிக்கல்களைச் சந்திக்கும் போது, தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் அந்தக் கட்சிகளின் பங்கீடுகளுக்கு ஊடாக கூட்டமைப்பில் போட்டியிட்டு இருக்கிறார்கள். அதனால், கூட்டமைப்பில் இருப்பவர்களில் 75 சதவீதமானவர்கள் தங்களது கட்சிக்காரரர்கள் என்கிற எண்ணம் தமிழரசுக் கட்சியினருக்கு உண்டு.

அதனால்தான், கூட்டமைப்பின் தீர்மானங்களை சம்பந்தனும் எம்.ஏ சுமந்திரனும் ஏக நிலையில் நின்று எடுத்து வந்திருக்கிறார்கள். அந்தத் தீர்மானங்கள் மீது அதிருப்திகள் இருந்த போதிலும், டெலோவோ, புளொட்டோ எதிர்ப்பை வெளியிடுவதில்லை. இந்த நிலையின் தொடர்ச்சி, கூட்டமைப்பு என்றால் தமிழரசுக் கட்சிதான்; ஏனைய இரு கட்சிகளும் இரண்டாம் நிலையில் இருப்பன என்பது சம்பந்தன் தொடங்கி, தமிழரசுக் கட்சியின் கடைநிலை ஆதரவாளர் வரையில் எண்ணமாக இருந்தது.

ஆனால், கடந்த பொதுத் தேர்தலில் கூட்டமைப்பு வெற்றி கொண்ட 10 பாராளுமன்ற உறுப்பினர்களில் நான்கு பேர் டெலோ, புளொட் கட்சிகளுக்குள் இருந்து வந்தவர்கள். கூட்டமைப்புக்கு கிடைத்த ஒரு தேசிய பட்டியல் உறுப்புரிமையை தமிழரசுக் கட்சி எடுத்துக் கொண்டது. அந்த உறுப்பினரும் இல்லை என்றால், தமிழரசுக் கட்சி சார்பில் ஐந்து உறுப்பினர்களே வெற்றி பெற்றிருப்பார்கள். இது, கூட்டமைப்புக்குள் கிட்டத்தட்ட தமிழரசுக் கட்சிக்கும் மற்றைய இரு பங்காளிக் கட்சிகளுக்கும் இடையில் கிட்டத்தட்ட 50:50 என்கிற நிலையை உருவாக்கும் சூழலை ஏற்படுத்தியது.

தமிழரசுக் கட்சி தொடர்ச்சியாக 'பெரியண்ணன்' மனநிலையில் தங்களை கையாண்டு வந்திருக்கின்ற சூழலில், தற்போது கிடைத்திருக்கின்ற பிடியை வைத்துக் கொண்டு, கூட்டமைப்பை கட்சியாக பதிவு செய்து, கூட்டுத் தலைமைக்கான சூழலை ஏற்படுத்திவிட வேண்டும் என்று டெலோ எண்ணியது. அந்த எண்ணத்துக்கு புளொட்டும் இசைந்தது. அரசியல் என்பது சந்தர்ப்பங்களை கையாளும் வித்தை என்கிற நிலையில், டெலோவும், புளொட்டும் அந்த நகர்வை எடுத்தன.

ஆனால், கூட்டமைப்பு என்கிற பெயரில் தமிழரசுக் கட்சியின் ஊடாக வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்றுவிட்டு, பங்காளிக் கட்சிகள் குடைச்சல் கொடுத்து வருகின்றன என்பது, தமிழரசுக் கட்சியின் தொடர் எரிச்சல். அதனால், தனித்துப் போட்டியிடுவதற்கான வாய்ப்புக்காக அந்தக் கட்சி காத்திருந்தது. தமிழ்த் தேசிய பரப்பில் இப்போது இருக்கின்ற கட்சிகளில் மிகப்பெரிய கட்சி தமிழரசுக் கட்சிதான். அதற்குத்தான் பருத்தித்துறை தொடக்கம் பொத்துவில் வரைக்கும் கிளைக் கட்டமைப்புடன் கூடிய கட்சிக் கட்டமைப்பு பலமாக இருக்கின்றது.

அந்தக் கட்சியின் உறுப்பினர்களுக்கான அங்கிகாரம் என்பது, பங்காளிக் கட்சிகளால் பறிக்கப்படுவதான குற்றச்சாட்டு கீழ் மட்டத்திலேயே உண்டு. அதனால், தமிழரசுக் கட்சி தனித்துப் போட்டியிட வேண்டும் என்கிற எண்ணம் மேல் மட்டத் தலைவர்களிடத்தில் மாத்திரமல்ல, கீழ் மட்டத்திலிருந்தும் எழுந்து வந்த ஒன்று. அந்தச் சுவடை கவனிக்காமல் டெலோவும் புளொட்டும் தங்களது பங்கைக் கோர முனைந்த போது, தனித்து விடப்பட்டிருக்கிறார்கள்.

சம்பந்தன் இருக்கும் வரையில் கூட்டமைப்பு என்கிற அடையாளத்திலிருந்து தமிழரசுக் கட்சி விலகி நிற்பதற்கோ, தனித்து தேர்தலில் போட்டியிடுவதற்கோ வாய்ப்புகள் இல்லை. அதற்கு அவர் அனுமதிக்க மாட்டார் என்று பங்காளிக் கட்சிகள் நினைத்தன. அத்தோடு, சம்பந்தனின் காலத்துக்குள் தங்களுக்கான தலைமைத்துவ பங்கீட்டை செய்து கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் நினைத்தார்கள். ஆனால், அந்தக் கணக்கு ஆரம்பத்தில் இருந்து பிழையாகவே இருந்தது.

ஏனெனில், சம்பந்தன் தமிழினத் தலைவராக தன்னை அடையாளப்படுத்துவதற்காக மாத்திரமே கூட்டமைப்பின் தலைவர் என்கிற நிலையில் தன்னை வைத்துக் கொண்டாரே அன்றி, கூட்டமைப்பாக தமிழ்த் தேசிய அரசியல் வளர வேண்டும் என்றோ, பங்காளிக் கட்சிகளை அரவணைத்துச் செல்ல வேண்டும் என்றோ அல்ல!

சம்பந்தனைப் பொறுத்தளவில், அவர் எப்போதுமே தன்னையொரு பாரம்பரிய தமிழரசுக் கட்சிக்காரனாகவே நினைத்து வந்திருக்கிறார். அதுபோலவே, முன்னாள் ஆயுதப் போராட்ட இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் எல்லாம் ஜனநாயக அரசியலுக்குள் வருவதற்கு தகுதியற்றவர்கள் என்பது அவரது எண்ணம். அதனை, அவர் பொது வெளியிலும் காட்டியிருக்கின்றார்.

டெலோவின் செல்வம் அடைக்கலநாதனுக்கோ, புளொட்டின் தர்மலிங்கம் சித்தார்த்தனுக்கோ, கடந்த காலத்தில் கூட்டமைப்பில் இருந்த ஈ.பி.ஆர்.எல்.எப்பின் சுரேஷ் பிரேமசந்திரனுக்கோ அது தெரியாதது அல்ல. ஆயுதப் போராட்ட இயக்கங்களை எல்லாம் இணைத்துக் கொண்டு, இயங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதை எண்ணி, சம்பந்தன் எரிச்சலடைந்து இருக்கிறார்.

ஓர் ஒப்பீட்டு உதாரணமாகக் கூறினால், சித்தார்த்தன் மீதான சம்பந்தனின் அணுகுமுறை என்பது, புளொட்டின் தலைவர் என்ற நிலையைத் தாண்டி, தமிழரசுக் கட்சியின் மறைந்த பாராளுமன்ற உறுப்பினரான தர்மலிங்கத்தின் மகன் என்கிற அளவிலேயே இருந்திருக்கின்றது. சம்பந்தனுக்கு தமிழரசு கட்சி சார்புதான் மிகப்பெரிய பிணைப்பு.

இப்படியான எண்ணத்தைக் கொண்டிருக்கும் ஒருவரிடத்தில் சென்று, தமிழரசுக் கட்சியின் எதிர்கால வளர்ச்சிக்கு தடையாக இருக்கும் விடயங்களை பங்காளிக் கட்சிகள் கோரினால், அதற்கு அவர் இணங்குவார் என்பதெல்லாம் அபத்தமானது. அதுவும், சம்பந்தனோடு கிட்டத்தட்ட இரண்டு தசாப்த காலம் பயணிக்கும் செல்வத்துக்கு அது தெரியவில்லை என்பதையெல்லாம் எப்படி புரிந்து கொள்வது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நேரடிப் பிரசார நடவடிக்கைகளால் கூட்டமைப்பு 2004 பொதுத் தேர்தலில் பெருவெற்றி பெற்றது. அன்று முதல் இன்று வரை, கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுவின் தலைவராக சம்பந்தன் பதவி வகித்து வருகிறார்.

கூட்டமைப்பு ஓர் அரசியல் கட்சியாகவோ, கூட்டணியாகவோ பதிவு செய்யப்பட்டு, சொந்தச் சின்னத்தைப் பெற்றுக் கொண்டிராத நிலையில், தொடர்ந்தும் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்திலேயே போட்டியிட்டு வந்திருக்கின்றது. அதனால், பாராளுமன்ற நடவடிக்கைகளின் போது, கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தமிழரசுக் கட்சியின் ஊடாகவே அடையாளப்படுத்தப்படுவார்கள். அதனால், சம்பந்தன் தன்னை 2014 பிற்பகுதி வரையில், தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவர் என்ற அடையாளத்தினூடாகவே முன்னிறுத்தினார். அப்போதும் அவர்தான் கூட்டமைப்பின் தலைவர்.

ஆனால், அவர், உத்தியோகபூர்வ மற்றும் மரபார்ந்த விடயங்களில் ஒழுகும் ஒருவராக தன்னை தமிழரசுக் கட்சி அடையாளங்களினூடாக முன்னிறுத்துவதில் கவனமாக இருந்தார். கடந்த எட்டு ஆண்டுகளாகத்தான், கூட்டமைப்பின் தலைவர் என்ற அடையாளத்தை அவர் தன்னோடு சேர்த்துக் கொண்டார். ஆவணங்களிலும் அப்படி எழுத முனைந்தார்.இப்படிப்பட்ட மனநிலையோடு இருக்கின்ற ஒருவரை நோக்கி, நீங்கள் கூட்டமைப்பின் தலைவர் இல்லை; உங்களது பதவி வறிதாகி விட்டது என்று டெலோவோ, புளொட்டோ கூறினால், அது பற்றி அலட்டிக் கொள்ளும் நிலையில் சம்பந்தன் இல்லை. புதிய கூட்டணி அமைத்து, தங்களை தமிழ்த் தேசிய கூட்டமைப்பாக டெலோவும் புளொட்டும் அறிவித்துக் கொண்டமை தொடர்பில், ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்கு சம்பந்தன் அளித்த பதில், பங்காளிக் கட்சிகளை அவர் எந்த நிலையில் வைத்திருந்தார் என்பதை உணரப் போதுமானது.

அதாவது, "தேர்தலில் மக்கள், யார் கூட்டமைப்பு என்பதை புரியவைப்பார்கள்; மற்றப்படி எதற்கும் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை" என்றார். அதுபோலத்தான், தமிழரசுக் கட்சிக்குள் சி.வி.கே சிவஞானம் போன்ற ஒரு சிலரைத் தவிர யாரும், புதிய கூட்டணி தங்களை கூட்டமைப்பாக முன்னிறுத்துவது குறித்து அலட்டிக் கொள்ளவில்லை.

ஏனெனில், சுமந்திரன், சிவஞானம் சிறீதரன் தொடங்கி பெரும்பாலானவர்கள் தமிழரசுக் கட்சியாக அடையாளம் பெறுவதையும், வளர்வதையுமே குறியாகக் கொண்டிருக்கிறார்கள்.

அதனால், கூட்டமைப்பு உரிமை கோரலின் ஊடாக, அரசியல் சர்ச்சையை தோற்றுவித்து கவனம் பெறலாம் என்று நினைத்த புதிய கூட்டணியான ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் முயற்சி, பெரியளவில் எடுபடவில்லை என்பதுதான் யதார்த்தம்.

## கடிதங்கள்

### கிளிநொச்சி அக்கராயன் பிரதான வீதியில்

# கால்நடைகளால் விபத்துகள்



மேய்ச்சல் தரவைகள் நெருக்கடி காரணமாக, கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு, திருமுறிகண்டி தொடக்கம் அக்கராயன், வன்னேரிக்குளம் வரையான வீதிக்கு அருகில், கால்நடைகளை மேய்ச்சலில் ஈடுபடுத்துமாறு அறிவித்த நிலையில், பெருமளவிலான கால்நடைகள் திருமுறிகண்டி தொடக்கம் வன்னேரிக்குளம் வரையான வீதிக்கு அருகில் மேய்ச்சலில் ஈடுபடுகின்றன.

இதன் காரணமாக, கிளிநொச்சி மேற்குக்கான போக்குவரத்தில் ஈடுபடுகின்ற குறிப்பாக உந்துருளிகளில் பயணிப்பவர்கள், விபத்துகளை எதிர்கொள்ள வேண்டிய நெருக்கடி நிலைமை காணப்படுகின்றது.


கால்நடைகளை பிரதான வீதிக்கு அருகில் மேய்ச்சலில் ஈடுபடுத்த வேண்டாம் என பொலிஸாரால் அறிவிக்கப்பட்ட நிலையில், பெருமளவிலான கால்நடைகள் அக்கராயன், வன்னேரிக்குளம் வீதியில் நடமாடித் திரிகின்றன. இதனால், விபத்துகள் இடம்பெறுகின்றன.

இதைவிட, பாலங்குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள நெற்செய்கையை, வீதியில் திரிகின்ற கால்நடைகள் அடிக்கடி அழித்து வருவதாகவும் திருமுறிகண்டி தொடக்கம் வன்னேரிக்குளம் வீதி வரை நடமாடுகின்ற கால்நடைகளை, பிற இடங்களுக்கு கொண்டு சென்று மேய்ச்சலில் ஈடுபடுத்துவதன் மூலமே, விபத்துகளை தவிர்ப்பதுடன் பயிர்ச் செய்கைகளையும் பாதுகாக்க முடியும் என பொது மக்களால் தெரிவிக்கப்படுகின்றது.

நடராசா கிருஸ்ணகுமார்



# மறைந்திருக்கும் தொன்மம்



ந.ரிலக் ஷனா
ஊடகக்கற்கைகள் துறை யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

இலங்கையை பொறுத்த வரையில் தமிழர் பண்பாடானது மதிக்கத்தக்க போற்றத்தக்க ஒரு பாரம்பரியமான விடயமாக இருக்கின்றது. இன்றும் கூட தமிழர் பாரம்பரியத்தை மேம்படுத்தும் அடையாளங்கள் மறைக்கப்பட்டும் பேணப்பட்டும் கண்டுபிடிக்கப்படாமலும் இருக்கின்றது. அவற்றில் நான் கண்டு அறிந்து கொண்ட ஒரு விடயம் பற்றி தெரியப்படுத்த ஆசைப்படுகின்றேன்.

யாழ்ப்பாணத்தில் கீரிமலை பிரதேசத்திற்கு ஒரு நாள் சென்றிருந்தேன். ஐந்து ஈஸ்வரங்களில் ஒன்றாக விளங்கும் நகுலேஸ்வரம் கோவில் அமைந்துள்ள இடம் தான் கீரிமலை பிரதேசம். தமிழர் பண்பாட்டு பாரம்பரியங்களை தன்னகத்தே சுமந்து கொண்டு காணப்படுகின்றது. அவற்றில் பல இடங்கள் பேசப்பட்டு பேணப்பட்டு வருகின்றன. அதிலும் சில இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டு பாதுகாப்பற்ற நிலையில் சிதைவடைந்து செல்கின்ற தன்மையிலும் காணப்பட்டது. அதில் நான் கண்டுகொண்ட ஒரு விடயம் தான் வெளவால் புறாக்குகை.

என்ன அந்த வெளவால் புறாக் குகை என ஆராயத் தொடங்கினேன். தேடினேன் பலரை சந்தித்தேன். அதிலிருந்து எனக்கு ஒரு விடை கிடைத்தது.

கீரிமலையை சுற்றி பல்வேறு குகைகள் காணப்படுகின்றன அவற்றில் மர்மங்கள் நிறைந்து உள்ளன என்று சிலர் கூறினார்கள். எனக்கோ நம்பிக்கை வரவில்லை. சரி நாமும் அப்படி ஒரு குகையை தேடி செல்வோம் அது எங்க,என்ன மாதிரி இருக்கின்றது அதனுடைய வரலாறு என்ன என்பதையும் எல்லா விடயத்தினையும் ஆராய வேண்டும் என்ற ஆர்வம் எனக்குள் தோன்றியது.

கோவிலை தரிசித்து விட்டு அதை சுற்றியுள்ள இடங்களை பார்த்து அங்கிருக்கும் சில நபர்களை சந்தித்தேன். இந்த வெளவால் புறாக்குகை பற்றி கேட்டிருந்தேன் பலர் அப்படி ஒரு குகையே இல்லை என்று கூறினார்கள்.

இருந்திருக்கிறது. அதுக்கு ஒரு வரலாறு இருக்கிறது அது நாங்கள் அனைவரும் அறிந்து கொண்டதே என்றும் அவை இப்பொழுது பாதுகாப்பற்ற நிலையில் சிதைவடைந்து செல்கின்றது என சிலர் தெரிவித்தனர்.தமிழர் பண்பாட்டிற்கு அடையாளமானது அவை பாதுகாக்கப்பட வேண்டும் என வருத்தத்துடன் தெரிவித்தனர்.

இப்படி இருக்குன்னு சொல்றாங்க பல பேர் இப்படி இல்லை என்றார்களே அப்ப எது உண்மையாக இருக்கு என்று சொல்லி இன்னும் தீவிரமாக அவற்றைப்பற்றி தேட ஆரம்பித்தேன்

ஓர் ஆதாரமான விடயம் தேவை என்பதற்காகவே நான் அங்கிருக்கிற ஒரு முக்கியமான சில பேரை சந்திக்க விரும்பினேன். கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தின் பிரதம குருக்களை சந்தித்தேன். தான் சிறுவயதில் இருக்கும் பொழுது அந்த குகைக்குள் சென்றதாகவும் அதைத்தான் பார்த்ததாகவும் அப்படி ஒரு குகை இருக்குது என்றார். அவரால் இவ்வளவு விடயங்கள் தான் எனக்கு சொல்ல முடிந்தது .

பின்னர் கீரிமலை நகுலேஸ்வரர் கோயில் அருகில் உள்ள ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயிலுக்கு சென்றேன். அங்கிருக்கின்ற பிரதம குருவை சந்தித்து இப்படி ஒரு குகை இருக்கிறதா அதன் வரலாறு உங்களுக்கு தெரியுமா? என்று கேட்டேன்.

நான் சிறு வயதில் இருக்கும் பொழுது அந்தக் குகையை சென்று பார்த்திருக்கிறேன். ஒரு குறிப்பிட்ட அளவு தூரம் நான் சென்று இருக்கிறேன். இக் குகைக்குள் மாருதப்புரவீகவல்லிக்கும் தொடர்பு இருப்பதாக கூறுகின்றார்கள். இருக்கிறதா இல்லையா என்பது உறுதியாக என்னால் சொல்ல முடியவில்லை என்றார்.


அந்த குகை எப்படி இருந்தது இப்ப ஏன் இப்படி இருக்கிறது என்று கேட்டேன். அந்த குகை ஆரம்பத்தில் எல்லோரும் சென்று பார்க்கும் அளவிற்கு தான் இருந்தது பின்னர் அதனை கவனிக்காமல் விட்டதால் கற்கள் எல்லாம் கொட்டுண்டு மரங்கள் வளர்ந்து பத்தைளாக ஒருத்தருமே இப்பொழுது உள்ளே செல்ல இயலாத அளவிற்கு சிதைவடைந்து பாதுகாப்பற்ற நிலையில் காணப்படுகின்றது. அதனை கண்டிப்பாக தொல்லியல் திணைக்களமானது கவனத்தில் கொண்டு அவற்றை பராமரிக்க வேண்டும் என கூறினார்.

அங்கு வாழ்ந்த கந்தகுட்டி பாலச்சந்திரன் எனும் பெயருடைய கிராமவாசி ஒருவரை சந்தித்தேன். அந்த வெளவால் புறாக் குகை பற்றி முதலில் நான் கேட்டேன்

வெளவால் புறாக்குகையாது ஒல்லாந்தர், போர்த்துக்கேயர் இருந்த போது இருப்பதாக கூறினார். சோழ இளவரசியான மாருதப்புரவீகவல்லிக்கும் தொடர்பு இருப்பதாக சொன்னார். அதாவது சோழ இளவரசியான மாருதப்புரவீகவல்லி ஒரு முனிவரது சாபத்தினால் குதிரை முகத்தைப் பெற்றார் அந்தக் குதிரை முகத்துடன் வெளியே நடமாட முடியாத சோழ இளவரசி கீரிமலையில் இருக்கின்ற நாதமுனிகளின் அற்புதங்களை அறிந்து அவரை சந்திப்பதற்காக இந்தியாவிலிருந்து பரிவாரங்கள் சேனைகளுடன் கீரிமலை கடற்கரையில் வந்து இறங்கினார்.

அதன் பின்னர் நாதமுனிகளை சந்தித்து. ஆலோசனைப்படி கிரிமலையில் இருக்கின்ற தீர்த்தக்கேணியில் நீராடி வந்தால் உனது குதிரை முகம் நீங்கும் என அவர் கூறினார். அதற்கேற்ப மாருதப்புரவீகவல்லி குதிரை முகத்துடன் தன்னால் வெளியே நடமாட முடியாது வெட்கமடைந்து கீரிமலை கேணிக்குச் செல்வதற்காக குகைகளைப் பயன்படுத்தினர். இந்த வெளவால் புறாக் குகையானது மாருதப்புரவீகவல்லியால் அமைக்கப்பட்டது எனவும் அவரால் தான் இக் குகை பயன்படுத்தப்பட்டது எனவும் உறுதியாக கூறினார்.

கீரிமலையில் வெளவால் புறாக் குகை என்று ஒரு பண்பாட்டு தொல்லியல் சின்னம் காணப்படுகின்றது. இந்த குகையானது பேணிப் பாதுகாக்கப்பட, பாராமரிக்கப்படவேண்டிய ஒரு தொல்லியல் சின்னமாக விளங்குகின்றது.



குஜராத்

# பி.பி.சி ஆவணப்படத்தால் சர்ச்சையில் சிக்கிய மோடி

பிரபல செய்தி ஊடகமான பி.பி.சி கடந்த 2002 ஆம் ஆண்டு முழு இந்தியாவையும் உலுக்கிய 'குஜராத் கலவரம்' தொடர்பாக "India: The Modi Question" என்ற இரண்டு பாகங்களைக் கொண்ட ஆவணப்படமொன்றை கடந்த செவ்வாயன்று வெளியிட்டது.

குறித்த ஆவணப்படத்தில், முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறையைத் தடுக்க மோடி முயற்சி மேற்கொள்ளாமல் இருந்துள்ளார் எனவும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இது உலகளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.





இந்நிலையில் குறித்த ஆவணப்படத்தில் பிரதமர் மோடி குறித்த சர்ச்சைக்குரிய காட்சிகள் இடம் பெற்றமை தொடர்பாக கண்டனம் தெரிவித்துள்ள அமெரிக்கா, இந்தியாவுடன் மதிப்பு மிக்க உறவை தாம் நாடுவதாகவும், இந்திய அமெரிக்க உறவுகள் வலுவானநிலையில் இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

அதேசமயம் பிரித்தானியாவின் பிரதமர் ரிஷி சுனக்கும் பி.பி. சியின் ஆவணப்படத்துக்கு ஆதரவு அளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# சபரிமலை விவகாரம்; பெண்கள் சென்றால் தீட்டா? யார் கூறியது?

## சர்ச்சையில் சிக்கிய ஐஸ்வர்யா




'சபரிமலையில் பெண்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டமை' குறித்து பிரபலநடிகை ஐஸ்வர்யா ராஜேஷ் தெரிவித்துள்ள கருத்தானது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அண்மையில் 'தி கிரேட் இந்தியன் கிச்சன்'(*The Great indian kitchen* ) படக்குழுவின் செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்ட ஐஸ்வர்யாவிடம், சபரிமலையில் பெண்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டமை குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இதற்குப் பதில் அளித்த அவர் " பெண்கள் சென்றால் தீட்டு ஏற்படுமா? யார் கூறியது? கடவுள் எல்லோருக்கும் ஒன்று தான். ஆண், பெண் வித்தியாசமெல்லாம் கடவுளுக்கு கிடையாது. எந்தக்கடவுளும் என் கோவிலுக்கு இவர்கள் வரலாம், அவர்கள் வரக்கூடாது என்று சொல்லவில்லை. அப்படி எந்த கடவுளாவது சொல்லியிருக்கிறார்களா? இருந்தால் சொல்லுங்கள்.

இவை அனைத்தும் மனிதர்கள் உருவாக்கியது. நான் இது போன்ற கட்டுப்பாடுகளை எப்போதும் நம்புவதில்லை. இப்பொழுதும் கூட ஆணாதிக்கம் இருக்கின்றது என்பது என் கருத்து" எனத் தெரிவித்துள்ளார்.



சென்னை

# நுங்கு உட்கொண்டால் மார்பகங்கள் பெரிதாகும்

## சர்ச்சையில் சிக்கிய மருத்துவர்

சர்ச்சைக்குரிய வகையில் மருத்துவக் குறிப்புகளைத் தெரிவித்த விவகாரம் தொடர்பாக, பிரபல சித்த மருத்துவர் ஷர்மிகா, நேற்று முன்தினம்(24) இந்திய மருத்துவ சங்கத்திடம் விளக்கம் அளித்துள்ளார். சென்னையைச் சேர்ந்த ஷர்மிகா, சமூக வலைதளங்களில் சித்த மருத்துவக் குறிப்புகளைத் தெரிவித்து வந்த நிலையில், சமீபத்தில் அவர் அளித்த சில குறிப்புகள், சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தன.

குறிப்பாக, ஒரு 'குளோப் ஜாமூன்' உட்கொண்டால் மூன்று கிலோகிராம் எடை கூடும். குப்புற படுத்தால் மார்பக புற்றுநோய் வரக்கூடும், தினமும் எட்டு நுங்குகள் உட்கொண்டால் பெண்களின் மார்பகங்கள் பெரிதாகவும், அழகாகவும் மாறும்' போன்ற மருத்துவ கருத்துக்கள் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தன.

இந்நிலையில், ஷர்மிகா,சித்த மருத்துவக் குறிப்பில் இல்லாதவற்றை பேசி வருவதாக அவர் மீது புகார் அளிக்கப்பட்டது.

திண்டுக்கல்

# 'துணிவு' பார்த்து வங்கியில் கொள்ளை



இயக்குநர் எச்.வினோத், தயாரிப்பாளர் போனி கபூர் மற்றும் அஜித் குமார் இணைந்த மூன்றாவது திரைப்படமான 'துணிவு' அண்மையில் வெளியாகி திரையரங்குகளில் வெற்றிநடைபோட்டு வருகின்றது.


"பொதுமக்கள் மீது வங்கிகள் நிகழ்த்தும் அத்துமீறல்கள் "குறித்து பேசும் இத்திரைப்படமானது ரசிகர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்று வருகின்றது.

இந்நிலையில் இத்திரைப்படப் பாணியில் திண்டுக்கல் , தாடிக்கொம்பு வீதியில் செயற்பட்டு வரும் வங்கியொன்றில் நேற்றுமுன்தினம் நபர் ஒருவர் கொள்ளையடிக்க முயற்சி செய்திருந்தமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சம்பவ தினத்தன்று குறித்த வங்கிக்குள் மிளகாய் பொடி பெப்பர் ஸ்பிரே , கட்டிங் பிளேட், கத்தி உள்ளிட்ட ஆயுதங்களுடன் உள்ளே நுழைந்த நபர் ஒருவர் அங்கிருந்த ஊழியர்கள் மீது பெப்பர் ஸ்பிரே மற்றும் மிளகாய் பொடியினை வீசியுள்ளார்.

பின்னர் வங்கி ஊழியர்களின் கைகளையும் டேப்பைக் கொண்டு கட்டிப்போட்டு, வங்கி லாக்கருக்குள் இருந்த பணத்தையும் கொள்ளையடிக்க முயற்சி செய்துள்ளார்.

இதன்போது வங்கி ஊழியர் ஒருவர் வெளியே தப்பித்து



வந்து கூச்சல் போட்டுள்ளார். இதையடுத்து வங்கிக்குள் நுழைந்த பொதுமக்கள் கொள்ளையனை மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்நிலையில் பொலிஸாரின் விசாரணையில் "குறித்த நபர் ,பூச்சி நாயக்கன்பட்டியைச் சேர்ந்த கலீல் ரகுமான் என்பதும், துணிவு படம் பார்த்துவிட்டு வங்கியில் உள்ள பணத்தை கொள்ளையடிக்க முயற்சித்துள்ளார்" என்பதும் தெரியவந்துள்ளது.

மேலும் வாழ்க்கை வெறுத்து விட்டதாகவும் ஒரே கொள்ளையில் வாழ்க்கையில் செட்டிலாக திட்டமிட்டதாகவும்அந்நபர் வாக்குமூலம் அளித்துள்ளார்.

இந்நிலையில் உண்மையிலேயே படம் பார்த்துதான் இச் செயலில் இறங்கினாரா ? அல்லது வேறு யாரும் இந்த கொள்ளை முயற்சியின் பின்னணியில் உள்ளனரா ? என்ற கோணத்தில் பொலிஸார் தீவிர விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

இச்சம்பவமானது அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பெங்களூர்

# வீதியில் பணத்தை அள்ளி வீசிய நபர் கைது



நபர் ஒருவர் வீதியில் பொது மக்களை நோக்கி பணத்தை அள்ளி வீசிச்சென்ற சம்பவம் பெங்களூரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பெங்களூரில், கே.ஆர். மார்க்கெட் அருகே உள்ள மேம்பாலத்தில் நேற்று முன்தினம் காலை 10.45 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவ தினத்தன்று கோர்ட்-சூட் அணிந்து கொண்டு இருச்சக்கர வாகனமொன்றில்



குறித்த மேம்பாலத்திற்கு வந்திறங்கிய நபர், தனது பையில் இருந்த பணத்தை எடுத்து மக்களை நோக்கி வீசிவிட்டுச் சென்றுள்ளார்.

அதே சமயம் இது குறித்த வீடியோக்களும் இணையத்தில் வைரலானது.




ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான தரவரிசையில்

# முதலாமிடத்துக்கு முன்னேறிய இந்தியா

சர்வதேச கிரிக்கெட் சபையின் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான அணிகளின் தரவரிசையில் முதலாமிடத்துக்கு இந்தியா முன்னேறியுள்ளது.

நியூசிலாந்துக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் முதலிரண்டு போட்டிகளையும் ஏற்கெனவே வென்றிருந்த இந்தியா, இந்தூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாவது போட்டியிலும் வென்று 3-0 என நியூசிலாந்தை வெள்ளையடித்தமையைத் தொடர்ந்தே தரவரிசையில் முதலாமிடத்துக்கு முன்னேறியுள்ளது.

ஸ்கோர் விவரம்:


நாணயச் சுழற்சி: நியூசிலாந்து

இந்தியா: 385/9 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஷுப்மன் கில் 112 (78), றோஹித் ஷர்மா 101 (85), ஹர்டிக் பாண்டியா 54 (38), விராட் கோலி 36 (27), ஷர்துல் தாக்கூர் 25 (17) ஓட்டங்கள். பந்துவீச்சு: பிளையர் டிக்னர் 3/76, ஜேக்கப் டஃபி 3/100, மிஷெல் பிறேஸ்வெல் 1/51, லொக்கி பெர்கியூசன் 0/53, மிற்செல் சான்ட்னெர் 0/58)

நியூசிலாந்து: 295/10 (41.2 ஓவ.) (துடுப்பாட்டம்: டெவொன் கொன்வே 138 (100), ஹென்றி நிக்கொல்ஸ் 42 (40), மிற்செல் சான்ட்னெர் 34 (29), மிஷெல் பிறேஸ்வெல் 26 (22) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷர்துல் தாக்கூர் 3/45, குல்டீப் யாதவ் 3/62, யுஸ்வேந்திர சஹால் 2/43, ஹர்டிக் பாண்டியா 1/37, உம்ரான் மலிக் 1/52)

போட்டியின் நாயகன்: ஷர்துல் தாக்கூர்

தொடரின் நாயகன்: ஷுப்மன் கில்



ஜேர்மனிய புண்டெஸ்லிகா தொடர்:

# சமநிலையில் மியூனிச் எலோன் போட்டி

ஜேர்மனியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான புண்டெஸ்லிகா தொடரில், தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற எஃப். சி கொலோனுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான பயேர்ண் மியூனிச் சமப்படுத்தியது.

அந்தவகையில், புண்டெஸ்லிகா புள்ளிகள் பட்டியலில் 36 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் மியூனிச் உள்ளது. 32 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் ஆர். பி லெய்ப்ஸிக்கும், தலா 30 புள்ளிகளைப் பெற்றுள்ளபோதும் கோலெண்ணிக்கை வித்தியாசத்தில் ஐன்ரச்ட் பிராங்க்ஃபேர்ட் மூன்றாமிடத்திலும், யூனியன் பேர்லின் நான்காமிடத்திலுமுள்ளன. இதில் பிராங்க்ஃபேர்ட்டும், பெர்லினும் ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளன.




மாளிகைக்காடு பிரீடம் விளையாட்டுக் கழகத்தின்

# சீருடை அறிமுகம்

எம்.என்.எம். அப்ராஸ்

அம்பாறை மாவட்டம் மாளிகைக்காடு பிறீடம் விளையாட்டுக் கழகத்தின் 30ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கழகத்தின் புதிய சீருடை அறிமுக நிகழ்வானது, கழகத்தின் தலைவர் எம்.எஸ். எம். ஹக்கீம் தலைமையில் மாளிகைக்காடு கல்முனை சபீனா முஸ்லிம் வித்தியாலய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.



இத்தாலிய சீரி ஏ தொடர்:

# நடப்புச் சம்பியன்களை வென்ற லேஸியோ

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற நடப்புச் சம்பியன்கள் ஏ.சி மிலனுடனான போட்டியில் 4-0 என்ற கோல் கணக்கில் லேஸியோ வென்றது.

அந்தவகையில், சீரி ஏ புள்ளிகள் பட்டியலில் 50 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் நாப்போலி உள்ளது. 38 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் ஏ.சி மிலனும், லேஸியோ, இன்டர் மிலன் ஆகியன தலா 37 புள்ளிகளைப் பெற்றுள்ளபோதும் கோலெண்ணிக்கை வித்தியாசத்தில் மூன்றாம், நான்காமிடங்களில் காணப்படுகின்றன.

நியூசிலாந்து

# பிரதமரானார் கிறிஸ் ஹிப்கின்ஸ்



நியூசிலாந்தின் பிரதமராக 2017ஆம் ஆண்டு முதல் பதவி வகித்து வந்தவர் ஜெசிந்தா ஆர்டன். இவர் கடந்த 19ஆம் திகதி தனது பதவியை இராஜினாமா செய்யவுள்ளதாக அறிவித்திருந்தார்.

இவ் அறிவிப்பானது அந்நாட்டு மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்து.

இந்நிலையில் நியூசிலாந்தின் 41ஆவது பிரதமராக கிறிஸ் ஹிப்கின்ஸ் நேற்று (25) காலை முறைப்படி பதவியேற்றுக் கொண்டார்.

2008ஆம் ஆண்டு நாடாளுமன்றத்திற்கு முதன்முறையாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஹிப்கின்ஸ், 2020 ஆம் ஆண்டு நவம்பரில் கொரோனா தடுப்புக்கான அமைச்சராக நியமனம் செய்யப்பட்டார்.

அதே சமயம் இவர் பொலிஸ், கல்வி, பொது சேவை ஆகிய துறைகளின் அமைச்சராகப் பதவி வகித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அவுஸ்திரேலியா





# ஹெலிகொப்டரில் அதிரடி காட்டும் ‘அடிடாஸ் பந்து’

அவுஸ்திரேலியாவில் வரும் ஜூலை மாதம் தொடங்க உள்ள பெண்களுக்கான உலகக்கோப்பை கால்பந்து போட்டியில், பயன்படுத்தப்படவுள்ள கால்பந்தானது சிட்னி நகரில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

‘ஓப்-சைட்’ விதிமீறலை கண்டறியும் நவீன தொழில்நுட்பத்துடன், ‘அடிடாஸ்’ நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்ட இக் கால்பந்தின் பிரமாண்ட மாதிரியானது ஹெலிகொப்டர் மூலம் அண்மையில் சிட்னிக்குக் கொண்டுவரப்பட்டது.

மேலும் குறித்த கால்பந்தில் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளின் கலாசாரத்தை பிரதிபலிக்கும் விதமாக பழங்குடி கலைஞர்களால் வடிவமைக்கப்பட்ட சின்னமொன்றும் அச்சிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உக்ரேன்



# ரஷ்யா ஒலிம்பிக்கில் போட்டியிடக் கூடாது–செலென்ஸ்கி

உலக நாடுகளின் எதிர்ப்பையும் மீறி உக்ரேன் மீது ரஷ்யா கடந்த 11 மாதங்களுக்கு மேலாகத் தாக்குதல் நடத்தி வருகின்றது.

இதன்காரணமாக ரஷ்யா மீது பல்வேறு நாடுகள் பொருளாதாரத்தடைகளை விதித்து வருகின்றன. இந்நிலையில், அண்மையில் உக்ரேன் ஜனாதிபதி செலன்ஸ்கி, பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மேக்ரானிடம் தொலைபேசியில் உரையாடியுள்ளார்.

இதன்போது அடுத்த ஆண்டு பாரிசில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளில், ரஷ்யாவைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் இடம் பெறக்கூடாது என அவர் வலியுறுத்தியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா

# வீடு தேடி வரும் மருந்துகள்




அமேசான் நிறுவனமானது மாதம் 5 டொலர் கட்டணமாகச் செலுத்தினால் மருந்துகளை வாடிக்கையாளர்களின் வீடுகளுக்கே கொண்டு சேர்க்கும் புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

இது குறித்து அமெரிக்க அமேசான் மருந்தகத்தின் முதன்மை மருத்துவ அதிகாரியான குப்தா கூறுகையில், “நீரிழிவு, இரத்த அழுத்தம், தலைமுடி கொட்டுதல் போன்ற 80க்கும் மேற்பட்ட நீண்டகால நோய்களுக்கான 50 முக்கியமான மருந்துகளை வீடு தேடி வழங்கும் திட்டத்தை எமது நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இவ்வசதியைப் பெற விரும்பும் வாடிக்கையாளர்கள் மெடிக்கேர், மெடிக்கைட் போன்ற அரசின் சுகாதாரத்திட்டத்தில் இணைந்திருப்பது கட்டாயமாகும்” இவ்வாறு தெரிவித்துள்ளார்.

போர்த்துக்கல்



# வரலாற்றில் முதன் முறையாக கொடுக்கப்பட்ட ‘வெள்ளை அட்டை’

கால்பந்து வரலாற்றில் முதன்முறையாக நடுவரால் ‘வெள்ளை அட்டை’ கொடுக்கப்பட்ட சம்பவம் போர்த்துக்கலில் நடைபெற்ற பெண்களுக்கான கால்பந்துப் போட்டியில் இடம்பெற்றுள்ளது.

கால்பந்துப் போட்டிகளில் பொதுவாக மஞ்சள், சிவப்பு நிற அட்டைகளையே நடுவர்கள் பயன்படுத்துவதை நாம் பார்த்திருக்கின்றோம்.

இது வீரர்களின் மோசமான நடத்தை மற்றும் விதிமீறல்களைக் குறித்து எச்சரிக்கவும், அவர்களை மைதானத்தில் இருந்து வெளியேற்றவும் பயன்படுத்தப்படுகின்றது.

இந்நிலையில் தற்போது மூன்றாவது நிற அட்டையாக வெள்ளை நிற அட்டை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

வீரர்களின் சிறந்த விளையாட்டுக் குணத்தை (Sportsmanship) பாராட்டவும் நேர்மை மற்றும் மதிப்புமிக்க நடத்தைகளை ஊக்குவிக்கவும் இந்த வெள்ளை கொடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் அண்மையில் பெஃப்னிகா மற்றும் ஸ்போர்டிங் லிஸ்போன் அணிகளுக்கு இடையே இடம்பெற்ற போட்டியில், இரு அணி மருத்துவ உதவியாளர்களும் ஒருவருக்கொருவர் உதவியமையைப் பாராட்டும் வகையில் நடுவர் தனது பையில் இருந்து வெள்ளை அட்டையைக் காட்டியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான்

# நீதிமன்றத்தில் வைத்து மகளைக் கொன்ற தந்தை



நீதிமன்றத்தில் வைத்து நபர் ஒருவர் தனது மகளை துப்பாக்கியால் சுட்டுக் கொலைசெய்த சம்பவம் பாகிஸ்தானில் இடம்பெற்றுள்ளது.

பாகிஸ்தானின் வஜிரிஸ்தான் மாவட்டத்தை சேர்ந்த இளம்பெண் ஒருவர், கராச்சியைச் சேர்ந்த வைத்தியர் ஒருவரைக் காதலித்து வந்துள்ளார்.

இதற்கு அப் பெண்ணின் குடும்பத்தினர் எதிர்ப்பு தெரிவித்து வந்த நிலையில், தனது வீட்டை விட்டு வெளியேறிய அப்பெண், தனது காதலரை கரம் பிடித்துள்ளார்.

எனினும் அப்பெண்ணின் தந்தை, தனது மகளை, வைத்தியர் கடத்திச் சென்றுவிட்டதாக கராச்சி பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்துள்ளார்.

இந்நிலையில், தான் கடத்தப்படவில்லை; விருப்பப்பட்டே திருமணம் செய்து கொண்டதாக கூறுவதற்காக, குறித்த பெண் கராச்சியில் நீதிமன்றத்துக்குச் சென்றுள்ளார். அப்போது அங்கு வந்திருந்த பெண்ணின் தந்தை, தனது மகளை துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்துள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 26 ஜனவரி 2023, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.